விலை ரூபா: 10.00


*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: எட்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 ஆடி 18 வெள்ளிக்கிழமை (03.08.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 227




# இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கத்திலிருந்து வெளியேறியது

## அமைச்சுப் பதவிகளிலிருந்தும் இராஜினாமா

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்திலிருந்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் விலகுவதாக அதன் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் அறிவித்துள்ளார்.

இதனையடுத்து அமைச்சு மற்றும் பிரதி அமைச்சுப் பதவிகளிலிருந்தும் இ.தொ.கா. உறுப்பினர்கள் இராஜினாமாச் செய்துள்ளனர்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## எத்தனை பில்லியன் கொடுத்தாலும் பிரபாகரனை விலைக்கு வாங்க முடியாது

### அமைச்சர் ராஜித உரை

(கொழும்பு)

எத்தனை பில்லியன் ரூபாய்களைக் கொடுத்தாலும் வேலுப்பிள்ளை பிரபாகரன் போன்ற போராட்டத்தலைவர் ஒருவரை விலைக்கு வாங்க முடியாது. இது அனைத்துத் தரப்பினரும் அறிந்துள்ள விடயம். பணத்திற்கு சோரம் போகும் ஒருவராக பிரபாகரனை கருதவும் முடியாது என்று நிர்மாண மற்றும் பொறியியல் துறை அமைச்சர் ராஜித சேனாரட்ண தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதிகளான ஜே.ஆர். ஜெயவர்த்தன, ஆர்.பிரேமதாசா, டி.பி.விஜயதுங்க, சந்திரிகா குமாரதுங்க ஆகியோரால் விலைக்கு வாங்க முடியாமல் போன வேலுப்பிள்ளை பிரபாகரனை ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பசில் ராஜபக்ஷ விலைக்கு வாங்கியிருந்தால் அது தேசியத்திற்கு கௌரவமளிக்கும் செயலாகும்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## 50 வீத சம்பளக் குறைப்புக்கு சகல அமைச்சர்களும் இணக்கம்

### அமைச்சர் யாப்பா தகவல்

(கொழும்பு)

சகல அமைச்சர்களும் தமது மாதாந்த சம்பளத்தில் 50 வீதத்தை எதிர்வரும் ஆறு மாதங்களுக்கு குறைத்துக்கொள்வதற்கு தீர்மானித்துள்ளதாக தகவல் ஊடகத்துறை அமைச்சர் ... டும். ஏற்கனவே குறைத்துப் பெறுகின்றன சம்பளத்துக்கேற்ப அமைச்சர்கள் சகலரும் தமது மாதாந்த சம்பளத்தில் 75 வீதத்தைக் குறைத்தே பெற்றுக்கொள்வர்.

இந்த முன்மாதிரியைப் பின்பற்றி அமைச்

## வன்முறையை கைவிட்டால் புலிகளுடன் பேசத்தயார்

### அமைச்சர் ரோஹித போகொல்லாகம தெரிவிப்பு

(கொ... ு)

தமிழீழ விடுதலைப்பு... கள் பயங்கரவாதத்தையும் வன்முறைகளையும் கைவிட்டால் பேச்சுவார்த்தை நடாத்த தயாராக இருப்பதாக வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம தெரிவித்துள்ளார். மணிலாவில் ஆசிய பாதுகாப்புச் சபையின் கூட்டத்தி... பின்னர் நேற்று ஊடகவியலாளர்களிடம் ரோஹித போகொல்லாகம கூறியதாவது;

இலங்கையில் அரசியல் பேச்சுக்கள் மூலம் உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் நடவடிக்கைகளை அரசாங்கம் கைவிடவில்லை. ஆனால் போராளிகள் தங்களது நேர்மையை வெளிப்படுத்த வேண்டும். விடுதலைப்புலிகளுடன் நாளையே பேச்சுக்களை நடத்த

(08 ஆம் பக்கம் பார்க்க)

## மாணவன் உட்பட இருவர் சுட்டுப்படுகொலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.உயர் தொழில் நுட்ப நிறுவன மாணவன் உட்பட இருவர் நேற்று ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். யாழ். உயர் தொழில் நுட்ப நிறுவனத்தில் உயர் கணக்கியல் தேசிய டிப்ளோமா இரண்டாம் வருட மாணவன் ஒருவர் நேற்று ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்றுக் காலை 7.30 மணியளவில் திருநெல்வேலி ஆடியபாதம் வீதி தலங்காவற் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் இடம் பெற்றுள்ளது. கண்டி வீதி சுண்டுக்குளியைச் சேர்ந்த தணிகாசலம் சசிரூபன் (வயது 25) என்ற மாணவனே கொல்லப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை 6.30 மணியளவில் சிங்கள வகுப்பு ... க்கு சென்றபோதே இச் சம்பவம் இடம் பெற்றுள்ள... உறவினர்கள் விசாரணையின்போது தெ... த்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா பிரேதபரிசோதனைக்காக சடலத்தை யாழ். போதனாவைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு கோப்பாய் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இதேவேளை வரணி காட்டுப்புலம் மாசேரிப் பகுதியில்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## அனைத்துக்கட்சி பிரதிநிதிகள் குழுவிலிருந்து

(கொழும்பு)

சகல அமைச்சர்களும் தமது மாதாந்த சம்பளத்தில் 50 வீதத்தை எதிர்வரும் ஆறு மாதங்களுக்கு குறைத்துக்கொள்வதற்கு தீர்மானித்துள்ளதாக தகவல் ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார். அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது, நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது அமைச்சர்களின் அமோக விருப்பத்தின் பேரில் நாட்டின் தற்போதைய நிலைமைகளைக் கருத்தில் கொண்டு இத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இது ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஒரு முன்மாதிரியாக அமையவேண்டும். ஏற்கனவே குறைத்துப் பெறுகின்றன சம்பளத்துக்கேற்ப அமைச்சர்கள் சகலரும் தமது மாதாந்த சம்பளத்தில் 75 வீதத்தைக் குறைத்தே பெற்றுக்கொள்வர்.

இந்த முன்மாதிரியைப் பின்பற்றி அமைச்சுக்களின் செயலாளர்களும் தமது மாதாந்த சம்பளத்தில் 15 வீதத்தினை அரசாங்கத்துக்கு வழங்க இணக்கம் தெரிவித்துள்ளனர். சவுதி அரேபியாவில் மரண தண்டனைத் தீர்ப்பு விதிக்கப்பட்டுள்ள இலங்கை பணிப்பெண் தொடர்பாக அரசாங்கம் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போது அமைச்சர் கூறியதாவது;

சவுதி அரேபியா ஒரு சுதந்திர நாடு. அதற்கென்று சில வரையறுத்த சட்டதிட்டங்கள் உள்ளன. அச் சட்டங்களில் மாற்றத்தை ஏற்படுத்துமாறு எம்மால் நிர்ப்பந்திக்க முடியாது. நாம் அப் பெண் விவகாரம் குறித்துக் கருணை காட்டுமாறு (08 ஆம் பக்கம் பார்க்க)

தலங்காவற் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் இடம் பெற்றுள்ளது. கண்டி வீதி சுண்டுக்குளியைச் சேர்ந்த தணிகாசலம் சசிரூபன்

கோப்பாய் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இதேவேளை வரணி காட்டுப்புலம் மாசேரிப் பகுதியில் (08 ஆம் பக்கம் பார்க்க)

## அனைத்துக்கட்சி பிரதிநிதிகள் குழுவிலிருந்து ஜாதிக ஹெல உறுமய வெளியேறத் திட்டம்?

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினை குறித்து ஆராயும் அனைத்து கட்சி பிரதிநிதிகள் சபையில் இருந்து ஜாதிக ஹெல உறுமயவும் வெளியேறும் நிலை ஏற்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. அனைத்து கட்சி பிரதிநிதிகள் சபையின் தொடர்ச்சியான நான்கு அமர்வுகளில் ஜாதிக ஹெல உறுமய கலந்துகொள்ளவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் ஜாதிக ஹெல உறுமயவினால் முன்வைக்கப்பட்ட யோசனைகள் ஏனைய பிரதிநிதிகளால் நிராகரிக்கப்பட்டமையை அடுத்தே அந்த கட்சி கூட்டங்களில் கலந்து கொள்வதை இடைநிறுத்தியுள்ளது. இதேவேளை சிறிலங்கா சுதந்திர கட்சியின் (08 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே

தரிசனம்

சிறப்புப் பார்வை

# தொழிலாளர் காங்கிரஸின் முடிபால் இலங்கை அரசியலில் குழப்பநிலை

## பொதுத் தேர்தல் விரைவில் வரும் என்கின்றனர் ஆய்வாளர்கள்

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்திலிருந்து இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்களைக் கொண்ட கட்சியான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வெளியேறியமையினால் முஸ்லிம் காங்கிரஸும் வெளியேறுமா? அரசாங்கம் கவிழுமா? ஜே.வி.பி ஆதரிக்குமா? என்று இலங்கை அரசியலில் குழப்பநிலை ஏற்பட்டுள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி-68, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்-8, ஜாதிக ஹெல உறுமய-7, முஸ்லிம் காங்கிரஸ்-6, முஸ்லிம் காங்கிரஸில் இருந்து விலகிய-4, ஈ.பி.டி.பியில் இருந்து 1 என்று மொத்தமாக 94 பேர் இருந்தனர்.


எதிர்க்கட்சி வரிசையில் ஐக்கிய தேசியக் கட்சி-68, சிறிலங்கா சுதந்திரக்கட்சி (மக்கள் பிரிவு)-2, ஜே.வி.பி.-39, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு -22 என மொத்தம் 131 பேர் இருந்தனர். இந் நிலையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் இருந்து 8 உறுப்பினர்களும் எதிர்க்கட்சியுடன் இணைந்தால் மகிந்த அரசு கலைக்கப்படுமென ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (08 ஆம் பக்கம் பார்க்க)

# 'பிரபாகரன்' படப்பிடிப்பால் கொழும்பு நகரில் பரபரப்பு

(கொழும்பு)

கொழும்பு பம்பலப்பிட்டிப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற 'பிரபாகரன் என்ற பெயரில் தயாராகும் சிங்களப் படத்தின் படப்பிடிப்புக் காட்சியால் அப் பகுதி எங்கும் சிறிது நேரத்திற்குப் பரபரப்பு ஏற்பட்டது.

அந்தப் படத்தில் இடம்பெறும் காட்சி ஒன்றுக்காக இராணுவ வாகனம் ஒன்று குண்டுத் தாக்குலுக்கு இலக்காவது போன்றும் அப்பகுதியில் சடலங்கள் சிதறிக்கிடப்பது போன்றும் காட்சிகள் அமைக்கப்பட்டன.



இதற்காக போலியான இறப்பர்குண்டுகளைப் பயன்படுத்தி இராணுவ வாகனம் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தப் படப்பிடிப்புக் காட்சிகாக கொழும்பு பம்பலப்பிட்டியூடான காலி வீதி தற்காலிகமாக புதன்கிழமை பிற்பகல் முதல் மூடப்பட்டது.

மக்களுக்கு அறிவிக்கப்படாமலேயே படப்பிடிப்புக்கான குண்டுகள் வெடிக்க வைக்கப்பட்டன. இதனையடுத்து துப்பாக்கிச் சூடும் நடத்தப்பட்டதால் மக்கள் அலறியடித்துக் கொண்டு ஓட்டம் பிடித்தனர்.

படப்பிடிப்பு நடைபெற்ற இடத்தில் மனித உடல்கள் சிதறிக்கிடப்பது போன்ற காட்சியை அப்பகுதியில் நின்றவர்கள் கண்டு இது தற்கொலைக் குண்டுத் தாக்குதலோ என அஞ்சி பதற்றமுற்றனர். பின்னர் இது படப்பிடிப்புக் காட்சி என்பதை அறிந்து நிம்மதி பெருமூச்சு விட்டவாறு கலைந்து சென்றனர். (ச-5)

## தெல்லிப்பழை துர்க்காதேவி மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான மஹோற்சவம் எதிர்வரும் 16 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளது.

26 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். கொடியேற்றம் காலை 11 மணிக்கும் தேர்த் திருவிழா காலை 9 மணிக்கும் நடைபெறவுள்ளது. (ச)

## சீருடை அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

உலக சாரணர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இங்கிலாந்து தீவக ஒருங்கு சேர் நண்பர்கள் அமைப்பின் ஆறாவது ஜெர்சி சாரணர் குழுவின் உதவியுடன் சீருடை அன்பளிப்புச் செய்யும் நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் மாவட்ட சாரணர் ஆணையாளர் சு.சிவபாதரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் முதன்மை விருந்தினராக இலங்கை வடமாகாண பொறியியலாளர் சங்கத் தலைவர் சி.உருத்திரலிங்கம் கலந்து கொள்கின்றார். (ச-6)

## திருமறைக் கலாமன்ற கலை நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், இளவாலை திருமறைக் கலாமன்றங்கள் இணைந்து வழங்கும் 'புது யுகம் நோக்கிய பாதையில்' என்னும் தலைப்பிலான கலை நிகழ்ச்சி நாளை பிற்பகல் 2 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச உதவி அரசாங்க அதிபர் திருமதி றூபினி வரதலிங்கமும் சிறப்பு விருந்தினராக மானிப்பாய் பிரதேச சபை செயலாளர் மேரிஜோசப் சாந்தசீலனும் கௌரவ விருந்தினராகப் பண்டத்தரிப்பு ப.நோ.கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளர் ஆறுமுகம் நாகராசாவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ச)

# பல்கலை மாணவன் படுகொலை பீடாதிபதிகள் அதிர்ச்சி - கவலை

(யாழ்ப்பாணம்)

ஊடக வளங்கள் பயிற்சி மையத்தின் இதழியல் டிப்ளோமா கற்கைநெறி மாணவன் சகாதேவன் நிலக்ஷன் துப்பாக்கியால் சுடப்பட்டு அகால மரணம் அடைந்தசெய்தி எமக்கு அதிர்ச்சியையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

மறைந்த மாணவனுக்கு அஞ்சலி செலுத்துவதுடன் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம் என யாழ்.பல்கலைக்கழக பீடாதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக ஆறு பீடாதிபதிகளும் கையொப்பமிட்டு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பல இன்னல்களுக்கு மத்தியில் பல்கலைக்கழகக் கல்விச் செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் இத்துயர சம்பவம் நடைபெற்றுள்ளமை பல்கலைக்கழக சமூகத்தினர் மத்தியில் குறிப்பாக மாணவர்கள் மத்தியில் பெரும் மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளது.

கொலைகள் எவரால் என்ன நோக்குடன் செய்யப்பட்டாலும் அவை கண்டிக்கப்பட வேண்டியவை. மனித உயிருக்கு மதிப்பளிக்க வேண்டியது அவசியம். பல்கலைக்கழகம் சுமுகமாக நடைபெறுவதைப் பல்கலைக்கழக சமூகமும் பெற்றோர்களும் நலன்விரும்பிகளும் பெரும் எதிர்பார்ப்போடு வரவேற்றனர்.

திட்டமிட்டபடி பல்கலைக்கழக கல்விச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட அனைத்துத் தரப்பினரதும் ஒத்துழைப்பை நாடி நிற்கின்றோம் என்றுள்ளது. (எ)

## சாரதி அனுமதிப் பத்திரத்திற்கு விண்ணப்பித்தவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

சாரதி அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கான எழுத்து மற்றும் செயன்முறைப் பரீட்சைகளுக்கான திகதிகள் இன்றுமுதல் வழங்கப்படவுள்ளதால் விண்ணப்பம் செய்த பரீட்சார்த்திகள் தங்களுக்குரிய எழுத்து மற்றும் செயன்முறைப் பரீட்சைத் திகதிகளை அலுவலக நாள்களில் நண்பகல் 12 மணிவரை யாழ்.மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் பெற்றுக் கொள்ள முடியுமென யாழ். மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் வ.பத்மநாதன் அறிவித்துள்ளார். (ச)

# தாய், மகன் உட்பட மூன்று பேர் மனித உரிமைகள் குழுவில் சரண்

(யாழ்ப்பாணம்)

தமது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து தாயும் மகனும் மற்றொருவரும் யாழ்.மனித உரிமைகள் ஆணைக் குழுவில் சரணடைந்துள்ளனர்.

குருநகர்ப் பகுதியைச் சேர்ந்த அவர்களின் வீட்டுக்குச் சென்ற சிலர் கொலை அச்சுறுத்தல் விடுத்துள்ளதாகத் தெரிவித்து குருநகரைச் சேர்ந்த தாயும் மகனும் தஞ்சமடைந்துள்ளனர்.

இதேவேளை கொடிகாமத்தைச் சேர்ந்த மற்றொரு இளைஞனும் மனித உரிமை ஆணைக்குழுவில் தஞ்சமடைந்துள்ளார். இவர்கள் மூவரும் பொலிஸார் ஊடாக நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது அவர்களை நீதிமன்றக் காவலில் வைக்குமாறு யாழ். மாவட்ட நீதிவான் இ.த.விக்னராஜா உத்தரவிட்டார். (எ-1)

## மாணவனைக் காணவில்லை

கோப்பாய் நாவலர் பாடசாலையின் மாணவன் ஒருவர் நேற்று முன்தினம் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது. வீட்டிற்கு அருகில் மரண வீடொன்றுக்குச்சென்றபோதே இவர் கடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இராசேந்திரன் தவதீபன் (வயது-15) என்ற மாணவனே கடத்தப்பட்டுள்ளார். (ச)

## ஆண்களுக்கான விளையாட்டுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி [illegible] விளையாட்டுக் கழகம் தனது 40 -வது ஆண்டு நிறைவினை முன்னிட்டு யாழ்.மாவட்ட மட்டத்தில் மாபெரும் விளையாட்டுப் போட்டியினை எதிர்வரும் 5 ஆம் [illegible] ஞாயிற்றுக்கிழமை காலை கழகத் தலை[illegible] மயூரதன் தலைமையில் நடாத்த [illegible]து.

இப் போட்டியில் ஆண்களுக்கு 70 மைல் [illegible]சக்கிள் ஓட்டமும் 10 மைல் மரதன் ஓட்டமும் வயது வேறுபாடின்றி நடைபெறவுள்ளது. (ச-6)

## காரைநகர் கலாமன்றத்தின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் நடாத்தும் சான்றிதழ், பரிசில்கள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 5 ஆம் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு, காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது. மன்றத் தலைவர் என். சோதிநாதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக காரைநகர் உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி. ஜெயசீலன் கலந்து கொள்கின்றார்.

சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர் செல்வி பரமேஸ்வரி கணேசன், கௌரவ விருந்தினராக திருமுருகன் கொம்நெற் உரிமையாளர் கே.கலாதரனும் கலந்து கொள்கின்றனர். (ச)

## இராசிபலன்

**03.08.2007**
**(ஆடி 18 வெள்ளிக்கிழமை)**
**பஞ்சமி முன்னிரவு 10.53 மணிவரை**
**உத்தரட்டாதி முன்னிரவு 10.51 மணிவரை**
**இராகுகாலம் 10.34-12.04 மணிவரை**
**சுபநேரம் 06.04-07.34 மணிவரை**
**சித்தாமிர்தம்**

| | |
|---|---|
| மேடம்:- | உணர்ச்சிவசப்படல், காரிய அலைச்சல், சுப செலவு, தெய்வசிந்தை. |
| இடபம்:- | நண்பர்கள் சந்திப்பு, தெய்வதரிசனம், தொழில் நன்மை, பெருமையடைதல். |
| மிதுனம்:- | சுபநிகழ்ச்சி, தூரதேச செய்தி, உற்சாகம், அதிகாரம். |
| கடகம்:- | உத்தியோக பங்கம், தனவிரயம், ஆன்றோரால் மதிக்கப்படுதல், புதிய முயற்சி. |
| சிங்கம்:- | வீண் தொல்லை, முழங்கால் வலி, பொருள் விரயம், முயற்சி தடங்கல். |
| கன்னி:- | மனோதைரியம், தெய்வதரிசனம், குடும்ப மகிழ்ச்சி, தேக நலன். |
| துலாம்:- | தடைப்பட்ட காரியம் கைகூடும், நோய் குணமடைதல், போசன சுகம், தெய்வதரிஸனம். |
| விருச்சிகம்:- | பணக்குறைவு, காரிய இடையூறு, கௌரவக் குறைவு, பிறருக்கு உதவுதல். |
| தனுசு:- | ஆரோக்கியக் குறைவு, கல்வியில் ஆர்வம், அற்பர் உறவு, பயந்த சுபாவம். |
| மகரம்:- | மனோதைரியம், கூட்டு முயற்சி, பண வருவாய், வாக்குமேன்மை. |
| கும்பம்:- | தெய்வ சிந்தை, மரியாதைக் குறைவு, அதிக செலவு, விவாதம். |
| மீனம்:- | வெகுமானம், தெய்வ தரிசனம், ஆழ்ந்த சிந்தை, ஜனவசியம். |

-வளவன்


**நியூ சிற்றி ரேட்**


சகல விதமான ரேடியோ, கசற் ரெக்கோர்டர், வோக்மன் T.V., Deck, V.C.D, D.V.D., டிஷ் அன்ரனா, அன்ரனா வயர், இவற்றின் உதிரிப் பாகங்கள் விற்பனைக்கு உண்டு.

*NEW CITY TRADE*
*135, கஸ்தூரியார் வீதி,*
*(குளத்துக்கு முன்பாக)*
*யாழ்ப்பாணம்.*
*தொலைபேசி:- 222 3226*
(c-260)

**கண்ணீர் அஞ்சலி**
எமது சங்கத்தின் தலைவர்
திரு. வீ.எஸ்.தியாகரர்சா அவர்களின் அன்புத் தந்தை
அமரர் வே.சின்னத்தம்பி
அவர்கள் இயற்கை எய்திய செய்தி கேட்டு ஆழ்ந்த மனக் கவலை அடைகின்றோம்.
அன்னாரது குடும்பத்தினரின் துயரில் பங்குகொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
பணியாளர்களும் பணிப்பாளர்களும்
வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கம்
(குடத்தனைப் பகுதி)
(226)

**காணி விற்பனைக்கு**
நவாலி வடக்கில் கிணற்றுடன் கூடிய 7 பரப்புக்காணி,மூன்று அறை வீட்டுக்குப் பத்திரிப்பு போட்ட நிலையில் உடன் விற்ப னைக்கு உண்டு.
தொடர்பு:- தொலை பேசி இல.
077517759
(265)





# தரிசனம்

ராவய 13 ராவய

## தெற்கின் கருத்து

# இனப்பிரச்சினைத் தீர்வில் வெளிநாடுகளின் வகிபங்கு

### பாத்திரத்தில் முதலையை தேடாதீர்கள்

சட்டத்தரணி

*ஷிரால் லக்திலக்க*

எமக்கு ஏன் மூன்றாம் தரப்பின் தலையீடு அவசியம்என்பதனை நாம முதலில் விளங்கிக் கொள்ள வேண்டும். எந்தவொரு முரண்பாடும் நிலவும் நிலையில் அந்த மோதல் உக்கிர நிலையை அடையுமாயின் ஒவ்



வாரு தரப்பும் அன்னியோன்யத்துடன் கலந்துரையாடி தீர்வை எட்ட முடியாத நிலையிலேயே மூன்றாம் தரப்பின்தலையீட்டின்மீது நம்பிக்கை கொள்ள நேரிடுகின்றது.

அந்த மூன்றாம் தரப்பு உள் நாட்டு தரப்பாகவும் அல்லது வெளிநாட்டு தரப்பாகவும் இருக்க முடியும்.

மேற் கூறப்பட்ட இரு தரப்பும் பேச்சு வார்த்தைகளை முன்னெடுக்க இந்த விடயம் அவசியமாகும். இலங்கையில் நிலவும் பிரச்சினையின் விசேட அம்சங்கள் காரணமாகவும் மோதலின் இயல்பு நிலைகள் காரணமாகவும் இப்பிரச்சினை தனித்துவம் சம்பந்தமான பிரச்சினையாக இருப்பதால் இலங்கைக்குள் மூன்றாவது தரப்பொன்றை தேடிக் கொள்வது கடினமான பணியாக அமைகின்றது. அத்துடன் அவ்வாறான பணிகளை மேற்கொள்ள இலங்கையில் சிவில் சமூகம் இல்லாமையும் இங்கு பிரச்சினையாகும்.

அத்துடன் பிரச்சினையில் தலையீடு செய்யக் கூடிய அதேவேளை நாட்டு மக்களால் ஏற்றுக் கொள்ளக் கூடிய நபர்கள் இல்லாத நிலையில் இலங்கையிலிருந்து வெளியே தலையீடு.தொடர்பான உதவிகளை நாட வேண்டியுள்ளது.

பேச்சுவார்த்தையின் போது ஏற்படும் குளறுபடிகளை தடுக்க வெளிநாட்டு தலையீடு அவசியமாகின்றது. அந்தத் தலையீடுகள் பொருளாதார ரீதியானதாகவோ யுத்த ரீதியானதாகவோ அல்லது உளவியல் ரீதியானதாகவோ அமையமுடியும். இந்த விடயங்கள் அனைத்தையும் சீர்தூக்கிப் பார்க்கும் போது வெளிநாட்டு தொடர்புகளுடன் பேச்சுவார்த்தை மேசையை வடிவமைக்க வேண்டியது அத்தியாவசியமான விடயம் எனலாம்.

அதனை தனிப்பட்ட தலையீடாகவோ அழுத்தமாகவோ பார்க்கக் கூடாது. நாம் இந்த செயற்பாட்டினை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். நாம் இணைத் தலைமை நாடுகளையும் விளங்கிக் கொள்ள வேண்டியதும் இந்த அர்த்தத்திலேயே என்றே கூற வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சி காலப் பகுதியிலேயே இணைத் தலைமை நாடுகளின் வகிபங்கு ஆரம்பமாகின்றது. பாதுகாப்பு வலைகளை அமைத்துக் கொள்ளவே இணைத் தலைமைகள் தேவைப்பட்டன. அன்று புலிகளுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளின் போது அவர்கள் பேச்சுவார்த்தைகளிலிருந்து வெளியேறாமல் இருக்கவும், வெளியேறினால் ஏற்படும் பாதிப்பினை குறைக்கவும் பாதுகாப்பு வலைகள் அமுலாக்கப்பட்டன.

இங்கு சிலருக்கு இணைத் தலைமைகள் குறித்து பல சிக்கல்கள் உள்ளன். அது எந்தவிதமான அடிப்படையும் அற்றதாகும். அரசின் தேவைகள் அடிப்படையிலேயே தலையீட்டாளர்கள் தொடர்பான தெரிவு இடம் பெறும். இந்தியாவா, மலேசியாவா, அமெரிக்காவா என்ற விடயம் இங்கு முக்கியத்துவம் பெற மாட்டாது. அந்தந்த நாடுகளின் தேவைகளின் அடிப்படையிலேயே இவ்விடயம் தீர்மானிக்கப்படுகின்றது.

இலங்கையின் அரசியல் மோதல நிலைகளின் அடிப்படையாக சதித்திட்ட நிகழ்ச்சி நிரல்களே அமைகின்றன. பாத்திரத்தில் முதலைகளை காணும் அரசியலே இங்குள்ளது. வெளிநாட்டவர்கள் பார்வை இங்கு திரும்பினால் உடனே அழிவு ஆரம்பித்து விட்டதாகத் தெரிவிக்கின்றனர். அனைத்தையும் அவநம்பிக்கையுடன் ஐயப்பாட்டுடன் பார்த்து பழகிய சமூகமே இங்குள்ளது.

இந்த இனப்பிரச்சினையை பேசித் தீர்க்க முடியுமா இல்லையா என்பது பற்றியே நாம் சிந்திக்க வேண்டும். எவராவது இப்பிரச்சினையை தீர்க்க முயலும் போது இப்பிரச்சினையின்மூலம்அவர்கள் ஆதாயம் தேடிக் கொள்வார்களா என்ற விடயத்தை தடுக்க முடியுமா இல்லையா என்பதே பிரச்சினையாகும். மற்ற அனைத்தும் கற்பனைகளாகும்.

### இணைத் தலைமைகளின் தலையீடு அவசியம்

*எம். டி. ஏ. ஹெரல்ட்*

முன்னாள் பிரதி கணக்காய்வாளர் நாயகம்


எமது நாட்டில் உருவாகியிருக்கும் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுமெனில் இறுதித் தீர்வை நோக்கிச் செல்ல வேண்டியதும் நாமே. அதில் எந்தவிதமான தர்க்கமும் நிலவ முடியாது.

ஆனால் இறுதித் தீர்வை நோக்கிச் செல்லும் பயணத்திற்கு தேவையான மேடையையும் அனுபவத்தையும் நாம் சர்வதேசப் பிரஜைகளிடமே சேகரித்துக் கொள்ள முடியும். அதாவது எமது இணைத் தலைமைகளிடமே இந்த உதவிகளைப் பெற்றுக் கொள்ள முடியும். இது அவசியமான விடயமாகும். அவர்கள் தலையிட்டு மேற்கொள்ளும் பேச்சுவார்த்தைகளின் போது தீர்க்கமான தருணத்தில் எம்மால் இறுதித் தீர்வினை எய்த முடியும்.

இன்றைய உலகமய மாதல நிலைமைகளின் கீழ் அனைத்து விடயங்களும் உலகமயமாக்கப் பட்டு விட்டன. அந்த நிலை எமக்கும் பொதுவானது. எமது பிரச்சினையை நாமே தீர்த்துக் கொள்கின்றோம் என்று கூறி எம்மால் ஒதுங்கியிருக்க முடியாது. சர்வதேச உறவுகள் தேவையில்லை என்று நிராகரிக்கவோ, அக்கறையின்றியிருக்கவோ முடியாது.

தற்போது எமது பிரச்சினைக்கு தீர்வு காண முன்வந்திருக்கும் நாடுகளிடம் பலதரப்பட்ட அரசியல் நிகழ்ச்சி நரல்கள்இருக்கமுடியும் ஆனால அவை எமக்கு பொருந்தாது.

எமது அரசியல் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வதே எமக்கு தேவை. இந்த நிலையில் அந்நாடுகளின் உள் விடயங்களை சீர்தூக்கிப் பார்ப்பது



எமது நாட்டிலும் பலதரப்பட்ட அரசியல் நிகழ்ச்சி நிரல்கள் உள்ளன. இந்த நிகழச்சி நிரல்கள் நாட்டை முதன்மைப் படுத்தி அன்றி கட்சிகளை முதன்மைப்படுத்தியே செயற்படுகின்றன.

இதனால் வெளிநாட்டு தலையீடு என்பது தவறாக அர்த்தம் கொள்ளப்படுகின்றது. இதனால் வெளிநாட்டு தலையீடு என்றால் என்ன என்பது குறித்து முதலில் புரிந்து கொள்வது அவசியம். இந்த பிரச்சினையில் அவர்கள் தலையீடு செய்கின்றனர் என்பதன் அர்த்தம் அவர்களின் தீர்வினை எம்மீது திணிக்கின் றார்கள் என்று அர்த்தம் அல்ல. தீர்வுக்கான வழியினை அவர்கள் ஏற்படுத்திக் கொடுக்கின்றார்கள் அவ்வளவே. எந்தவொரு தீய நபருக்குள்ளும் சிறந்த பண்புகள் இருக்க முடியும். அனைத்தையும் தவறாக அர்த்தப் படுத்திக் கொண்டதனாலேயே நாம் மோசமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

இந்த பிரச்சினைக்கு தீர்வு காண இணைத்தலைமை நாடுகளின் பங்களிப்புஅவசியமாகும். அதனை நிறைவேற்றிக் கொள்ள செயுற்படுவதே அவசியம்.

### தலையீடு வழிகாட்டுதலாக அமைய வேண்டும்

*மெனிக்கே சுமனசேகர*

உளவியல் எழுத்தாளர்

இந்த பிரச்சினைக்கு தீர்வு காண வெளிநாட்டு தலையீடு அவசியமாகும். ஆனால் அது வழிகாட்டுதலாக அமைய வேண்டும். உலகத்தில் இனப்பிரச்சினை நிலவும் நாடு எமது நாடு மட்டுமல்ல. பல நாடுகளில் இவ்வாறான பிரச்சினைகள் தோன்றி மத்தியஸ்தத்தின் மூலம் அவை தீர்க்கப்பட்டுள்ளன.

அவ்வாறாயின் எமக்கும் வெளிநாட்டு தலையீடுகள் அவசியமாகும். பிரச்சினைகளுக்கு தனித்து தீர்வு காண முடியாது என்பதனை ஓர் உளவியலாளராகநான்அறிவேன். இவ்வாறான நிலையில் இனப்பிரச்சினை என்ற பாரியளவிலான ஐயப்பாடுகள் மற்றும் துவேஷத்தைப் பரப்பும்



பல பிரச்சினைகளை நாம் தனித்து தீர்த்து விட முடியாது.

அதற்கு வளர்ச்சியடைந்த நாடுகளின் ஆலோசனைகள் எமக்கு அவசியமாக உள்ளது. அந்த தலையீடுகளை நாம் நிராகரிக்கின்றோமாயின் அதன் உள்ளடக்கம் இந்த பிரச்சினைக்கு தீர்வு காண எமக்கு விருப்பமில்லை என்பதாகும். இருபது வருடங்களாகியும் இப்பிரச்சினைக்கு தீர்வு காண எம்மால் இயலாத நிலையில் இனியும் தனித்து இப்பிரச்சினைக்கு தீர்வு காண முயற்சிப்[illegible] அர்த்தமற்ற செயலாகும்.

[illegible] சிலர் யுத்த[illegible] புரிய வேண்டும் என்று கூறுகின்றனர். இன்னும் சிலர் சமாதானம் வேண்டும் என்கின்றனர். இவ்வாறு வளைந்து வளைந்து பிரச்சினையைத் தீர்க்க முடியாது.

தற்போதாவது அர்ப் பணிப்புத் தன்மையுடன் வெளிநாட்டு தலையீடுகளின் பலனைப் பெற்று நாம் இப்பிரச்சினைக்கு தீர்வு காண முற்பட வேண்டும். பாதிக்கப்பட்டு தவிக்கும் இரு தரப்பினரிடையே இணக்கப்பாட்டினை ஏற்படுத்த வேண்டுமாயின் மத்தியஸ்தம் அவசியமாகும். இந்த பிரச்சினைக்கு வெளிநாட்டு தலையீடு அவசியம் என்றே நான் கருதுகினறேன்.

### நடுநிலையான மத்தியஸ்தம் அவசியம்

பேராசிரியர்

*திலோக்கசுந்தரி காரியவசம்*

இன்று நாம் விடுதலைப் புலிகளுடன் மட்டுமன்றி சர்வதேத்துடனும் யுத்தம் புரிய நேர்ந்துள்ளது. அமெரிக்காவை எடுத்துக் கொண்டாலும், இங்கிலாந்தை எடுத்துக்கொண்டாலும் அவுஸ்திரேலியா, கனடா,



நோர்வே ஆகிய எந்த நாடுகளை எடுத்துக் கொண்டாலும் அந்நாடுகள் மறைமுகமாக எந்தவகையிலோ விடுதலைப் புலிகளுக்கு உதவி புரிகின்றன. அவை அரச தலையீடுகளற்றதாக இருக்கின்றன. ஆனால் அந்த உதவிகள் அவர்களுக்கு கிடைத்த வண்ணமே உள்ளன. அது தான எமக்குள்ள பெரிய சிக்கல். இந்த நிலையில் மத்தியஸ்த நாடு களாக இந்த நாடுகளை சம்பந்தப்படுத்துவதாயின அதில் சிக்கல் நிலையிருப் பதாகவே நான் கருதுகின்றேன். அதற் காக இந்த பிரச்சினையை நாம் தனிதது தீர்த்துக் கொள்ளலாம் என்று நான் கூற வரவில்லை. அதுவும்இய லாதகாரியம் திருகோண மலையில்விளம்பரப் பலகையொன்றில்நான் விடயமொன்றை வாசித்தறிந்துக் கொண்டேன்.

அதில் 'வெளிநாட்டவர்களால் தான் நிம்மதி கிடைக்கும்' என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அது எவ்வாறாயினும் இவ்விடயம் தொடர்பில் நாம் மூன்றாம் தரப்பு ஒன்றை அணுக வேண்டியுள்ளது. அதனை சரியான தெரிவு முறைக்குள் உட்படுத்துவது பொறுப்பு கூற வேண்டியவர்களின் கடமையாகும்.

### வெளிநாட்டுச் சதிகளை புறக்கணிப்போம்

*குணதாச அமரசேகர*

இந்த பிரச்சினை எவராலும் உருவாக்கப்பட்ட பிரச்சினை அல்ல. நாமே உருவாக்கிக் கொண்ட பிரச்சினை இது. இந்த நாட்டில் இனப் பிரச்சினையே இல்லை என்பதே எனது நிலைப்பாடாகும்.

சர்வதேச சக்திகளினால் உருவாக்கப்பட்ட சதியே இந்த பிரச்சினை. இதனை நான் இன்று நேற்று மட்டும் கூற வில்லை. நான் எழுதியுள்ள 'குணதுரு மெதியம, தக்கி னெமி அருணலு' என்ற நூலில் இவ்விடயம் குறித்து 30 வருடங்



களுக்கு முன்னரேயே விளக்கமாகக் குறிப்பிட்டுள்ளேன்.

ஆனால் அன்றைய காலகட்டத்தில் மக்களால் அதனை விளங்கிக் கொள்ள முடியவில்லை. இன்று நாட்டில் மக்கள் அதனை உண்மை யென ஏற்றுக் கொள்கின்றார்கள். அவ்வாறாயின ஏன் நாம் வெளி நாட்டு மத்தியஸ்தத்தை கோர[illegible] வேண்டும். அந்த அளவுக்கு தீர்த்துக் [illegible]காள்ள வேண்டிய பிரச்சினைகள் எதுவும் இங்கில்லை. இங்குள்ள பயங்கரவாதப் பிரச்சினைக்கு ஒரே தீர்வு யுத்தமாகும்.

யுத்தம் செய்தே இந்த பிரச்சினையை தீர்த்துக் கொள்ள வேண்டுமே தவிர வெளிநாட்டு சதித் திட்டங்களுக்குள் நாம் அகப்பட்டுக் கொள்ள தேவையில்லை. அனைவரும் ஒன்றிணைந்து பயங்கரவாதிகளை அழித்தொழிப்பதே எமக்கிருக் கும் மாற்று வழியாகும். அப்பொழுது வெளிநாட்டுக் காரர்களின் சதித் திட்டங்கள் தானே அழிந்து விடும்.

### இந்தியத் தலையீடு நடைமுறை சாத்தியம் கொண்டது


*அகலகட சிறிசுமன தேரர்*

விரிவுரையாளர்

தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காண மூன்றாவது மத்தியஸ்தம் அவசியம் என்றே நான் கருதுகின்றேன். அத் தெரிவு இரு தரப்பினராலும்



ஏற்றுக கொள்ளப்பட்ட பலம் வாய்ந்த தரப்பாக இருக்க வேண்டும். இது வரை மேற்கொள்ளப் பட்ட வா றான அதிக நிதிச் செலவை ஏற்படுத் திய வெளிநாட்டுப் (6ஆம் பக்கம் பார்க்க)




# தரிசனம்

வலம்புரி

# இனப்பிரச்சினைத் தீர்வில் வெளிநாடுகளின் வகிபங்கு

## பௌத்த பீடங்கள் மீது சர்வதேச அழுத்தம் தேவை

பேராயர் கலாநிதி
எஸ்.ஜெபநேசன்
(முன்னாள் அத்தியட்சர் தென்னிந்திய திருச்சபை, தந்தை செல்வா அறங்காவற் குழுத் தலைவர்)



இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சர்வதேச அழுத்தம் எவ்வாறு இருக்க வேண்டும் என்ற கேள்விக்கு விடை காணு முன் இரண்டு விஷயங்களை கூற வேண்டியுள்ளது. முதலாவது சர்வதேசத்தின் அழுத்தம் முன்னொரு பொழுதும் இல்லாத அளவுக்கு இப்பொழுது அதிகரித்துக் காணப்படுகிறது. இரண்டாவது இலங்கை அரசு அதனை குறித்து பெரிதாக கவலைப்படாமல் இருக்கின்றது.

இலங்கையிலே இன்று உண்மையான அதிகாரம் மல்வத்தை, அஸ்கிரிய, ரமநாயக்க பௌத்த பீடங்களிலே தான் தங்கியுள்ளது. 1998ஆம் ஆண்டு நான் பிரான்சில் உள்ள ரெய்ஸி ஆச்சிரமத்திலுள்ள வண.சகோ.றொஜேர்ஸ் அவர்களைச் சந்தித்த பொழுது, 'நெருக்கடி நிலவும் நாடுகளில் நீங்கள் ஆச்சிரமங்களை அமைத்து சண்டையிடும் பிரிவுகளைச் சார்ந்தவர்களை அழைத்து ஒன்றாக வாழச் செய்து அமைதி ஏற்படுத்துகிறீர்களே இலங்கையிலும் அந்தப் பணியைச் செய்யக் கூடாதா?' என்று கேட்டேன். உடனே சகோ. றொஜேர்ஸ், 'கிறிஸ்தவ திருச்சபைக்கு செல்வாக்கு உள்ள நாடுகளுக்குத்தான் நாம் போவோம். இலங்கையிலே கிறிஸ்தவ சபைக்கு செல்வாக்கு இல்லை' என்று கூறினார்.

சர்வதேச அழுத்தம் இன்று பௌத்தமத பீடங்களில் கவனம் செலுத்த வேண்டும். தென்னிந்தியாவிலோ, இலங்கையிலோ பௌத்த பீடங்களுடன் தொடர்பு கொள்ளக்கூடிய செல்வாக்கு மிக்க தலைவர்கள் இல்லை. இலங்கையிலுள்ள பௌத்த துறவிகள் சிங்கள மொழியையும் பௌத்த சமயத்தையும் ஒன்றாகவே பார்க்கின்றனர்.

தமிழ் மக்கள் மத்தியில் சிறிதளவு பௌத்தர்கள் இருந்திருந்தால் பௌத்த துறவிகள் தமிழ் மக்கள் மீது கொஞ்சமாவது இரக்கம் காட்டியிருப்பர்.

ஜப்பானில் பௌத்த சமயத்திற்கு ஓரளவு செல்வாக்கு இருக்கின்றது. இலங்கைக்கான வெளிநாட்டு உதவியில் அறுபது வீதம் ஜப்பானிலிருந்தே வருகின்றது. ஜப்பானின் அழுத்தம் பௌத்த துறவிகளை ஓரளவு மனம்மாறச்செய்யும். இலங்கையிலே சமாதானம் பண்ணுகிறவர்களுக்குக் கோடி கோடியாகக் கொடுக்கும் வெள்ளைக்கார நாடுகள் பலம்வாய்ந்த பௌத்த தூதுக் குழு ஒன்றை இலங்கைக்கு அனுப்புவதில் கவனம் செலுத்த வேண்டும். தாய்லாந்து, மியன் மார், திபெத்து, ஜப்பான், சீனா ஆகிய நாடுகளைச சேர்ந்த பௌத்த துறவிகள் அடங்கிய சமாதானக் குழுவை இலங்கைக்கு

**வடக்கின் கருத்து**

அனுப்பி, இங்கு சிறிது காலம் அவர்களை பணியாற்ற விடவேண்டும்.

இலங்கைப் பிரச்சினை தொடர்ந்து நீடிக்குமானால் இந்த நாடு, சோமாலியா, சூடான், எதியோப்பியா போன்ற ஒரு நிலைக்குள் தள்ளப்படலாம். கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இலங்கை சீர்கெட்டுப்போனால் அது தென்னாசியாவுக்கு மட்டுமல்ல, ஆசியா முழுவதற்கும், ஏன் உலகம்முழுவதற்குமே சிக்கல்களை ஏற்படுத்தும்.

இதனை உலக நாடுகள் உணர்ந்து கொள்ளவேண்டும். இன்று பல தேசங்களிலே, இலங்கையர் என்றாலே சற்றுப் பயமும் வெறுப்பும் ஏற்படுகின்றன. தமிழ மக்களுக்கு மட்டுமன்றி சிங்களவர்களுக்கும் இதேநிலைதான். நமது தாய் நாடு தலை நிமிர்ந்து நிற்க வேண்டுமானால் மூவின மக்களும் நிம் மதியாக வாழக்கூடிய ஒரு அமைதித்தீர்வு ஏற்பட வேண்டும்.

---

இதற்கு சமஷ்டி ஒன்று தான் ஒரே வழி. சுமஷ்டித்தீாவு பற்றி முதலிற் கூறியவர் தந்தை செல்வா அல்ல, S.W.R.D பண்டாரநாயக்காவே. எனினும் இந்த நிலையிலிருந்து சிங்கள அரசியல் வாதிகள் எங்கேயோ போய்விட்டனா! எனவே இந் நிலையிலிருந்து இலங்கையை மீட்க சர்வதேச சமூகம் கவனம் செலுத்து வது எங்களுக்கும் நல்லது அவர்களுக்கும் நல்லது.

தமிழர்களின் பிரச்சினைகளை புரிந்து கொள்ளாத எந்தவொரு வெளிநாட்டினதும் தலையீட்டினால் தீர்வு கிட்டிவிடமாட்டாது. பொதுவாக ஈழத் தமிழர்களின் உரிமை சார்ந்த விடயத்தை வெளிநாடுகள், புரிந்துகொண்டுள்ள விதம் திருப்தி யானதாக இல்லை என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. தமிழர்களின் உரிமை சார்ந்த விடயத்திற்கு வேறுவடிவம் கொடுக்கும் போது

என்ற நம்பிக்கைகள் கலைந்து பல ஆண்டுகளாகிவிட்டன.

வெளிநாடுகளின் தலையீடு, அழுத்தம் இல்லாமல் பிரச்சினைக்குத் தீர்வில்லை என்பது இப்போது உறுதியாகிவிட்டது.

நோர்வேயின் சமாதான அனுசரணைப்பணி காரணமாகவே யுத்த நிறுத்த உடன்படிக்கையும், உள்ளக சுய நிர்ணய உரிமைக்கான உடன்பாடும் எட்டப்பட்டது.

இதுவிடயத்தில் நோர்வேயோ அல்லது வேறொரு வெளிநாடோ தலையிடாமல் இருந்திருந்தால், உள்நாட்டிற்குட்பட்டதான சமாதான முயற்சியின் மூலம் இந்தப் பெறுபேற்றை அடைந்திருக்க முடியாதென்பதை எவரும் ஏற்றுக் கொள்வர்.

எனவே நோர்வேயின் சமாதான அனுசரணைப்பணியின் வெற்றி இடை நடுவிலஅடையமுடியாத ஒன்றாகப் போய் விட்டாலும், அந்நாட்டின் முன்னாயத்த முயற்சிகள் வெற்றியளித்தன என்பதை மறுப்பதற்கில்லை.

ஆக,இதிலிருந்து இனப்பிரச்சினை விவகாரத்தில் வெளிநாட்டின் அனுசரணை –தலையீடு தேவையென்பது நிரூபணமாகின்றது.

எனவே வெளிநாடுகளின் தலையீடு தேவை என்றஏற்பு நிலையில், நோர்வேயின் அனுசரணைப்பணியில் காணப் பட்ட குறைபாடுகளை நீக்குவது



சர்வ தேசத் தலையீட்டின் முன்னா... தமாக இருக்கவேண்டும்.

அவ்வகையில் யுத்த நிறுத்த... கண்காணிப்பில் ஈடுபட்ட கண் காணிப்புக் குழுவின் ஆரோக்கியம் பல...மாக இருநதுள்ளதை அவதானிக்க முடியும்.

அதாவது யுத்த நிறுத்த மீறல்களை பதிவு செய்யும் ஓர் அலுவலகம் போன்று கண்காணிப்புக்குழு செ...தேயன்றி, யுத்த நிறுத்த மீறலி... ட்ட தரப்பை எச்சரிக்கை செய்யும் அமைப்பாக அது இயங்கவில்லை. இது மிகப்பெரும் பலவீனமாகும். இதற்கு மேலாக இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் ஓர் பொது மைப்பாட்டிற்குத் தம்மைத் தயார்ப்படுத்துவதில் வெளிநாடுகள் தவறிழைத்து விட்டன. அதாவது இலங்கையை ஜனநாயக அரசு என்ற கண்ணாடியினூடாகவே உலக நாடுகள் பார்த்தன.இது தமிழர்களின் பிரச்சினையை உணர்ந்து கொள்வதற்குத் தடைவிதித்தது.

இதன் காரணமாகவே நோர்வேயின் வேண்டுதலையும் தாண்டி ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப்புலிகள் அமைப்பைத் தடைசெய்திருந்தது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை விடுதலைப்புலிகள் மீதான அழுத்தமாக எதிர்பார்க்கப்பட்டிருக்கலாம். ஆனால் அது யதார்த்தத்தில் தோல்வியில் முடிவடைந்தது. எனவே வெளிநாடுகள் முதலில் இலங்கை இனப்பிரச்சினையின் தார்ப்பரியத்தை உணர்ந்து கொள்ள வேண்டும். அதேநேரம் நோர்வேயின் "மௌன மொழி" கலாசாரத்திலிருந்து விடுபட்டு

நேர்காணல்:– என்.விஜயசுந்தரம்

யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இரு தரப் பையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் சக்தியை இலங்கை இன விவகாரத்தில் தலையிடும் வெளிநாடுகள் கொண்டிருக்க வேண்டும். இதன் அடுத்த பக்கமாக, "பொருளா தாரத்தடை" என்ற ஆயுதப்பிரயோகத் திற்கும் சர்வதேச சமூகம் தயாராகவேண்டும். அப்போது தான் வெளிநாட்டுத் தலை யீடு இலங்கையில் நிரந்தர அமைதி யைக் கொண்டுவரும்.

---

## இலங்கை இன விவகாரத்தில் இந்தியாவே தலையிடவேண்டும்

திரு. த. கனகசபை
(ஓய்வு பெற்ற, உள்ளூராட்சி பிரதம சிறாப்பர்)

இலங்கையின் இனப்பிரச்சினை வெளிநாட்டின் தலையீடின்றி– அனுசரணையின்றி தீர்க்க முடியுமென யாரேனும் கருதுவார்களாயின் அதுவே இந்த



நூற்றாண்டின் முதற்தர மூடத்தனமாகும்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றிய பேச்சுவார்த்தைகள் உள்ளக ஏற்பாட்டு அனுசரணையுடன் நடைபெற்றதை நாம் மறந்துவிட முடியாது. ஆனால் அவை காலம் கடந்த முயற்சிகளாக இருந்தமையால் இலக்கை அடைய முடியாமல் போயிற்று.

அதன் பின்னர் வெளிநாட்டின் அனுசரணையில்லாமல் இனப்பிரசசினைக்கான தீர்வு சாத்தியம் இல்லை என்ற ஆரம்ப நிலையில் அதன் நிலைப்பாட்டை அண்டைநாடான இந்தியாவும் புரிந்து கொண்டது.அதனால் இலங்கை – இந்திய ஒப்பந்தம் சைச்சாத்தாகியது.

இலங்கை விவகாரத்தில் வெளிநாட்டின் தலையீட்டிற்கு இலங்கை – இந்திய ஒபபந்தம் நல்லதோர் சான்றாதாரமாகும். அதேநேரம் இலங்கை –இந்தியா ஒப்பந்தம் நடைமுறையில் சாத்தியமாகாமல் போவதற்கும் இந்தியாவின் அசைவு நிலையே காரணமாகும்.

அதாவது இந்திய வல்லரசு இலங்கையுடன், தான் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் வலுவான கொள்கையை கொண்டிருந்திருக்குமாயின், இனப்பிரச்சினை இத்துணை கோரத்தனத்தை அடைந்திருக்கமாட்டாது. எனவே இந்தியாவின் தலையீடு இருந்த போது ஒப்பந்தம் உருவானதும், இந்தியாவின் விலகல் ஒப்பந்தத்தை பெறுமதியற்ற தாக்கியதும் அனுபவத்தின் உண்மைகள். இதிலிருந்து இலங்கை இனப்பிரச்சினையின் தீர்வென்பது வெளிநாடுகளிலே உள்ளதெனத் துணிந்து கூறமுடியும்.

இலங்கை இனப்பிரச்சினையைப் பொறுத்தவரை வெளிநாட்டின் தலையீடு என்பது இந்தியாவின் தலையீட்டை மையமாக வைத்துக் கூறப்படுவதாகும்.

அண்டை நாடாக இருக்கக்கூடிய இந்திய வல்லாதிக்கத்தைத் தாண்டி ஏதேனுமொரு நாடு இலங்கை இனப்பிரச்சினையில தலையிடும் என எதிர்பார்க்க முடியாது. அவ்வாறு எதிர்பார்ப்பை மீறியதாக வெளிநாடொன்று இனப்பிரச்சினையில் தலையிட முற்படுமாயின் அதனை இந்தியா ஏற்றுக்கொள்ளுமா என்பது வேறு கதை. இதன் காரணமாக இலங்கை விவ காரம் குறித்து வெளிநாடுகள் கவலை தெரிவிப்பதுடன் மட்டும் தமது பணியை முடிவுறுத்திக் கொள்கின்றன.

இது போதுமானதல்ல. நோர்வேயைப் பொறுத்தவரை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கு மேலாக இந்தியாவைச் சமாளிக்க வேண்டிய தேவைப்பாடும் இருந்தது. இதுவும் நோர்வேயின் அனுசரணைப்பணிக்கு தடையாக அமைந்திருக்கலாம்.

என்னைப்பொறுத்தவரை இந்தியாவே இலங்கை இன விவகாரத்தில் தலையிட வேண்டும். அந்தத் தலையீடு இறுக்கமானதாகவும் இலங்கைக்கான ஆயுத வரவை ஒட்டுமொத்தத்தில் கட்டுப்படுத்தி யுத்தத்தை முற்றாக நிறுத்துவதாகவும் அமைய வேண்டும். அதன் பின்னர் தனது நாட்டில் இரு தரப்பையும் சந்திக்க வைத்து ஏற்கனவே செய்யப்பட்ட ஒப்பந்தத்தின் ஊடாக தீர்வை எட்டவேண்டும்.

---

## வெளிநாடுகளே தீர்வுத் திட்டத்தை முன்வைக்கும் சூழ்நிலை ஏற்படலாம்

திரு. எம். சின்னத்தம்பி
(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் வெளிநாடுகளின் தலையீட்டிற்கான கூர்முனைகள் திருப்தியாக்கப்படும் போதே, சர்வதேசத்தின் தலையீடு கருத் தரிக்க முடியும்.

இலங்கை இனப்பிரச்சினை மீதான உலக நாடுகளின் தலையீடெனபது உலகமயமாதலுடன் ஒத்துபபோகக் கூடிய பொருளாதார விரிவாக்கத்திற்கு உதவும் வகையிலேயே அமையும். எனினும் இலங்கைப் பிரச்சினையின் அவலங்களை அனுபவித்துக்கொண்டிருக்கும் மக்களிடையே வெளிநாடுகளின் தலையீடு தேவை என்ற எண்ணக்கரு தோற்றம் பெறுவதும், அத்தகைய தலையீடு எவ்வகையில் அமைய வேண்





டும் என்ற சிந்தனை முகிழப்படைவும் நியாயப்படுத்தப் படக் கூடியவையே.

ஏனெனில் இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வை துரிதப்படுத்துவதிலும், தாமதப்படுத்துவதிலும் சர்வதேசத்தின் வகிபாகம் உண்டென்பதை மறுத்து விடுவதிற் கில்லை.

அவ்வகையில் இலங்கை இன விவகாரத்தில் வெளிநாடுகளின் தலையீடு படிமுறையாக முன்ன கர்த்தப்பட வேண்டும். அதில் ஒன்றே உதவி வழங்குவதற்கான முன் நிபந்தனைகளாகும். இனப்பிரச்சினைக்கான தீர்வை வலியுறுத் தும் வகையில்–விரைவுபடுத்தும் நோக்கில் இலங்கைக்கான உதவிக்கு முன் நிபந்தனை விதிக்க முடியும். இதற்கு சாதகமானமுடிவைஎட்டுவதில்சர்வ தேச சமூகம் வெற்றி காணாதவிடத்து, இனப் பிரச்சினைக்கான ஏற்புடைய தீர்வுத்திட்டத்தை தானே முன் வைத்து அதனை அமுல்படுத்தும்கருமத்தை ஆற்றமுடியும்.

மேற்கூறப்பட்ட இரண்டு முறைகளுமே வெற்றியின் இலக்கை அடையமுடியாதவிடத்து ஐ.நா. படைகளின் வருகை பற்றிய தேவையை மக்கள் உணர்வதாகவும், விரும்புவ தாகவும் அமைய ,அது பற்றிய சிந தனை பாதையில் உலகநாடுகள் பயணிக்க வேண்டிய கட்டாயமும் உருவாகலாம். எனினும் அதற்கான கால அவகாசம் தேவையாக இருக்கும் என்பதை மறுக்கவும், மறக்கவும் முடியாது.

## பிரிட்டனே தலையிட வேண்டும்

திரு.கந்தையா சோமசேகரம் J.P
(வியாவில் ஐயனார்ஆலய அறங்காவலர்)

இலங்கை இனப்பிரச்சினையில் வெளிநாடுகளின் தலையீடு என்பதற்கு முன்னதாக இனப் பிரச்சினையின் தோற்றப்பாட்டை சர்வதேச சமூகம் தெளிவாக உணர்ந்துகொள்ள வேண்டும்.

இலங்கையில் இருக்கக்கூடிய

வெளி நாடுகளின் நடு நிலைத் தன்மை கெட்டு விடுகிறதென்றே கூற வேண்டும். வெளிநாடுகளின் இத் தகைய சாய்வு நிலை கள் கூட, இலங்கை இனப் பிரச்சினையை மேலும் மோச மாக்கியது என்று கூறலாம். இலங்கை இனவிவகாரத்தின் மீதான சர்வதேச சமூகத்தின் பார்வை வர்த்தகம் சார்ந்த தாக இருப்பதனால், ஈழத்தமிழர் விடயத் தில சில வெளி நாடுகள் தவறான முடிவை எடுத்து விட்டன. அந்தத தவறுகள் முதலில் சீராக கப்பட வேண்டும். அப் போது தான் வெளி நாட்டுத் தலையீடு ஏற்புடையதாகவும், நியாயப் படுத்தப் படக் கூடியதாகவும் அமையும். அவ்வகையில் என்னைப் பொறுத்தவரை இலங்கை இனப் பிரச்சினை யில் தலையிட்டு அதனை முடிவுக்குக் கொண்டு வரும் தார்மீகப் பொறுப்பு பிரிட்டனிடமே உண்டு. அதற்கான நியாயப்பாடுகளும் இல்லாமல் இல்லை. காலனித்துவ ஆட் சிக்கு முன்னதான இலங்கையின் வர லாற்றில் வடக்குக் கிழக்கு தமிழரின தாய கமாக இருந்துள் ளது.

எனினும் அதனை மாற்றியமைத்து தமது நலன் சார்ந்த அரசி யல் நிர்வாக உருவாக்கத்தை பிரிட்டன் மேற்கொண்டதன் காரணமாகவே ஈழத்தமிழர் இன்று நாதி யற்ற இனமாக மாற்றப்பட்டுள்ளனர். எனவே இத்தகைய மாறு நிலைக்கு உளநாட்டு அரசியல் தலைமைகளின் வகிபாகத்திற்கு சமமான வகிபாகம் பிட்டனுக்கும் உண்டு. ஆகவே தான் இலங்கை இனப்பிரச்சினையில் பிரிட்டனே தலையிட வேண்டுமெனக் கூறுகின்றேன்.


அண் டை நாடான இந்தியாவின் தலையீட்டைப் பலர் வலியுறுத்தலாம். ஆனால அங்கும் ஓர் சுயநல அரசியல் சொரூபம் இருப்பதை நாம் மறந்துவிடலாகாது. தமிழகத் தின் அரசியல்வாதிகள் பலர் தமது அரசியல் இலாபத்திற்காக ஈழத் தமிழர் பிரச்சினையை உச்சாடனம் செய்கின்றனர். அதற்கு மேலாக இந்திய மத்திய அரசில் காலத்திற்குக் காலம் மாறிவரும் அரசுகள் இலங்கையின் இனப்பிரச்சினையில் வேறுபட்ட கொள்கையை கொண்டுள்ளன.

இது இனப்பிரச்சினைக்கான–ஏற்புடைய தீர்வை எட்டுவதற்கு ஆரோக்கியமாக அமையாது. இதுவே கடந்த கால அனுபவமு மாகும். எனவே இலங்கை இனப் பிரச்சினைக்கு ஒருவகையில் காரண மாக இருந்த பிரிட்டன் தலையிட்டு முடிவை எட்ட வேண்டும். இதனை பிரிட்டன் செய்துமுடிப்பதற்கு, ஏனைய உலக நாடுகளும் சர்வதேச பொது அமைப்புகளும் பொருளாதாரத்தடை உள்ளிட்ட இறுக்கமான ஜனநாயக ஆயுதங்களை பிரயோகிக்க வேண்டும். அதில் இலங்கையில் காலத்திற்குக் காலம் மாறி வரும் அரசு களையும் பேரினவாதத் தீப்பந்தத்துடன் அரசியலில் நுழையும் தீயசக்திகளையும் கட்டுப்படுத்தும் கடிவாளம் தலையிடுகின்ற வெளிநாட் டின் கைகளில் இருப்பது கட்டாயமான தாகும்.

## பொருளாதாரத் தடையை இலக்காகக் கொள்ளவேண்டும்

திரு. தே.தேவானந்
(அரசசார்பற்றஅமைப்பின்செயற்பாட்டாளர்)

இலங் கை இனப் பிரச்சினையை உள்நாட்டு மட்டத்தில் தீர்க்க முடியும்



# தரிசனம்

வலம்புரி

# யுத்தமும் வேலைவாய்ப்பும்

## வடக்கின் கருத்து

இலங்கையின் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடுமிடத்து இன்று யாழ்.மாவட்டத்தின் நிலை முற்றிலும் மாறுபட்ட தொனறாகவுள்ளது. ஒரே ஒரு தரைப் போக்குவரத்துப் பாதை யான ஏ–9 பாதை மூடியநிலையில் சுதந்திரமான போக் குவ ரத்திற்கு வாய்ப்பற்ற ஒரு பிரதேசமாகவும், ஒருசில விமா னமும் கப்பல்களுமே நாட்டின் ஏனைய பகுதிகளுடன் இணைக்கும் நிலையும் தான் இன்று காணப்படுகின்றது.



இப்பிரதேசத்தின் தொழில்வாய்ப்பு நிலை மற்றும் அவறறில் பாதிப்பை ஏற்படுத்திய காரணிகள் பற்றியே இங்கு நோக்கப்படுகிறது.

'குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் சம்பளம் அல்லது பொரு ளாதார ரீதியான பிரதிபலனை எதிர்பார்த்து பொருளாதார நடவடிக்கையொன்றில் ஈடுபட்டிருத்தல் தொழில்வாய்ப்பு எனப் படும்.' தொழில் வழங்குநர், சம்பளம்பெறும் ஊழியர், சம் பளம்பெறாத குடும்ப ஊழியர், சுய தொழிலில் ஈடுபட்டிருப்போரே தொழில் வாய்ப் பிலுள்ளோராக கொள்ளப்படுவர்.

மூன்று தசாப்தங்களுக்கு மேலாக தொடரும் யுத்த சூழலானது இப்பிரதேசத்தின் பொரு ளாதார நடவடிக்கைகளை மெதுவடைய வைத்துள்ளது. (Slowdown of economic activities) இதனால் விவசாயம், கைத்தொழில், வர்த்தகம் உள்ளிட்ட சேவைகள் என அனைத்துத்துறைகளுமே மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

### இடப்பெயர்வு

'மீண்டும் மீண்டும் ஏற்பட்ட இடப்பெயர்வுகளால் தொழில் வாய்பபுக்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டன. 1980களின் பிற்பகுதியிலிருந்து வலிகாமம் வடக்கு மக்களின் இடப்பெயர்வு, 1991 இல் தீவுப்பகுதி மக்களின் இடப்பெயர்வு, 1995 இல் வலிகாமம் மக்களின் இடப்பெயர்வு,1996இல் அவர்களின் மீள்குடியேற்றமும், 2000இல் தென்மராட்சி மக்களின் இடப்பெயர்வு, 2004டிசம்பரில் சுனாமியால் மக்கள் இடப்பெயர்வு, 2006இல் முகமாலை, மிருசுவில், கொடிகாம மக்களின் இடப்பெயர்வு என தொடரும் இடப்பெயர்வுகள் மக்களின் தொழில்வாய்ப்பை மோசமடையச் செய்துள்ளன.

யாழ்ப்பாணத்தின் திறன்வாய்ந்த ஊழியப்படை (Skilled work force) பாதுகாப்பும் தொழில்வாய்ப்பும் தேடி நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும், வெளிநாடுகளுக்கும் இடம் பெயர்ந்துள்ளனர். பெருமளவு புத்திஜீவிகள் வெளியேறியுள்ளனர். இங்கு வயது முதிர்ந் தோரும், வறியவர்களும், நோயாளர்களும், போரினால் கைவிடப்பட்ட குழந்தைகளும், உடல் உளப் பாதிப்புக்குள்ளானவர்களும் என தங்கியிருப்போர் தான். (dependent) அதிக சதவீதத்தினராக மிஞ்சியுள் ளனர்.

எதிர்காலம் பற்றிய ஆபத்துக்களும் நிச்சயமற்ற தன்மையும் (Risks and Uncertainty of the future) தொழில் வாய்ப்புக்களை மிக மோசமாக பாதித்துள்ளன. கடத்தல்கள், கொலைகள், கொள்ளைகள், சுற்றிவளைப்புக்கள், கைதுகள், வீதித்தடைகள், திடீர் ஊரடங்குச்சட்டங்கள், கப்பம் கோரல்கள், துப்பாக்கி வேட்டுக்கள், பீரங்கிச்சத்தங்கள், பல் குழல் ஓசைகள் என்பன மக்களை கிலிகொள்ள வைத்துள்ளன. தொழில்வாய்ப்புக்கு முதலீடுகள் அவசியம். முதலீட்டுக்கு அமைதியான எதிர்காலம் பற்றிய நிச்சயத்தன்மைகள் அவசியம். இன்று யாழ்.குடாநாட்டில் முதலீடுகளை மேற்கண்ட நிச்சயமற்ற நிலைமைகள் இல்லாமலாக்கி வருகின்றன. இவை இருக்கின்ற புதிய தொழில்வாய்ப்புக்கள் உருவாகாத நிலையில் இருந்த தொழில் வாய்ப்புக்களையும் இல்லாமல் செய்துள்ளன.

### ஊரடங்குச்சட்டம்

முன்பு யாழ். குடாநாட்டில் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை, மின்தறிநிலையங் கள் போன்ற பலவும் இரவு பகலாக தொடர்ந்து 24 மணிநேரமும் இயங்கிவந்தன. தொழில் வாய்ப்புக்கள் நிறைந்து காணப்பட்டன. ஆனால் தற்போது ஊரடங்குச்சட்டமானது பொருளாதார நடவடிக்கைகளை குறுகிய கால்த்தில் செய்யவேண்டிய நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இன்று உலகின் வளர்ச்சியடைந்த நாடுகள் பலவற்றிலும் தூங்காத நகரங்கள் (இரவிலும் தொழிற்படும்) தோற்றம் பெற்றுவரும் நிலையில், யாழ்ப்பாண நகரம் பகலிலும் தூங்கும் நகரமாக மாறிவருகிறது. யாழ்.நகரின் பல நிறுவனங்களில் வேலைசெய்தவர்களும் இன்று தொழில் இழந்து நிற்கின்றனர்.

யாழ்.குடாநாட்டின் ஒரே தரைவழிப்பாதையான ஏ–9 பாதை மூடப்பட்டு ஓராண்டை அண்மிக்கும் இக் காலப்பகுதியில் இங்கு அனைத்துத்துறைகளுமே பாதிக்கப்பட்டுள்ளன. யாழ். குடாவின் முக்கிய ஜீவனோபாய தொழிலான விவசாயம், மீன்பிடி, வர்த்தகம் என்பன இதனால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

விவசாய உற்பத்திக்கான இயந்திரங்கள், உதி ரிப்பாகங்கள், உள்ளீடுகள், எரிபொருட்கள் பெறுவதில் சிரமங் கள், அவ்வா்று பெறுவதாயினும் அதிகவிலை. உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்த முடியாத அவலம். புகையிலை, வெங்காயம், மரக்கறிகள், வாழைப்பழங்கள். மாம்பழங்கள், திராட்சைப்பழங்கள் என விவசாயப் பொருட்களை நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு எடுத்துச்செல்லமுடியாது இருப்பதால் அவ்விவசாயிகள் இன்று தொழில்வாய்ப்பை இழந்து நிற்கின்றனர். பாற்பண்னைத் தொழிலும், கோழிவளர்ப்பும்கூட அவற்றுக்கான உள்ளீடுகளை பெறமுடியாத அல்லது உயர் விலையில் பெறவேண்டிய நிலையில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

கடலால சூழப்பட்ட யாழ். குடாநாட்டின் கடற்தொழிலானது முனைப்புப்பெற்றுவரும் யுத்த சூழலில் மிக மோசமாச பாதிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு காரணங்களால் பல்வேறு பிரதேசங்களிலும் மீன்பிடித்தடை அமுல்ப்படுத்தப்பட்டுள்ளது. அனுமதிக்கப்பட்ட சில பிரதேசங்களிலும் இரவு நேரத்தில் மீன்பிடிக்க முடியாத நிலை. பகலிலும் கூட அப்பிரதேசங் களில அடிக்கடி மீன்பிடித்தடை அச்ச சூழலில் அதுவும் கரையோரத்தில் மட்டுமே ஒரு குறுகிய நேரம் மீன்பிடிக்க முடிகிறது. இதனால் இன்று ஏராளமானோர் தொழிலிழந்து நிற் கின்றனர்.

மிகமோசமான முதலீட்டுச் சூழல் இங்கு தொழில் துறையை இல்லாமல் ஆக்கிவருகிறது. தொழிற்சாலைகள் மட்டுமன்றி சிறு குடிசைக் கைத்தொழில்கள் கூட இன்று பாதிக்கப்பட்டுள்ளன. வங்கிகள் வைப்புக் களை பெறுவதிலே காட்டும் ஆர்வம் கடன்களை வழங் குவதில்காட்டுவதில்லை. புதிய தொழிலை தொடங்க நிதி பெறுவதில் பலத்த சிரமம் காணப்படு கிறது.

### மோசமான வியாபாரச் சூழல்

மோசமான வியாபாரச் சூழல் (Poor business environment) வர்த்தகத் துறையை நலிவடையவைத்துள்ளது. பொருட்கள் இனமையால் வர்த்தக நடவடிக்கைகள் பலவும் முடங்கியதால் பலர் தொழில் இழந்துள்ளனர். ஏ–9 வீதியில் போக்கு வரத்தில் ஈடுபட்ட பாரவூர்திகள், சிற்றூர்திகள் அவற்றில் தொழில் வாய்ப்பு பெற்றவர்களும் தொழில் இழந்துள்ளனர். நாட்டின் ஏனைய பகுதிகளுடன் வர்த்தகத்தில் ஈடுபட்ட பலரும் தொழில் இழந்துள்ளனர்.

வேலைவாய்ப்புப் பற்றிய தகவல்களை உரிய வேளையில் பெறமுடியாமையும், படி வங்கள், விண்ணப்பங்கள் பெறுவதிலும் அனுப்புவதிலும் கடிதப் போக்குவரத்து தாமதங் கள், நேர்முகப்பரீட்சைக்கு செல்வதில் ஏற்பட்ட போக்குவரத்துப் சிக்கல்கள் இங்குள்ள பலருக்கு வேலைவாய்ப்பைப் பெறமுடியாமல் செய்துள்ளன.

அதுமட்டுமன்றி பல ஆண்டுகளாக இங்குள்ள பல அரச நிறுவனங்களின் வெற்றிடங்கள் நிரப்பப்படாதுள்ளன. தற்காலிக நியமனங்கள்கூட வழங்கமுடியாத நிலைகாணப்படுகிறது. பதிற்கடமை என்ற பேரில் ஒரே நபருக்கு பல பொறுப்புக் களை சுமத்தும் நிலையே இங்கு காணப்படுகிறது. கட்டிடப் பொருட்கள், மின்பொருட்கள் இன்மையால் மேசன், தச்சுத் தொழில்கள், கூலித்தொழில்கள், மின் இணைப்பில் ஈடுபடுவோர், குழாய் பொருத்துநர்கள் எனப்பலரும் தொழில் இழந்துள்ளனர்.

சுகாதார மருத்துவ சேவைகளும், நலன்புரிச் சேவைகளும் நலிவுற்ற நிலையே காணப்படுகிறது. மருத்துவ சாதனங்கள், மருத்துப் பொருட்கள் தட்டுப்பாடும், வைத்தியர்கள் பற்றாக்குறை போன்றவையும் இத்துறைகளிலான தொழில் வாய்ப்புக்களை மட்டுப்படுத்தியுள்ளன.

### சமூக கட்டமைப்புக்களின் உடைவு

சமூக கட்டமைப்புக்களின் உடைவு (Breakdown of social Structure) சமூகக்கட்டுப்பாடுகள். மரபுரீதியான கலாசாரப் பெறுமானங்கள் பொது அபிப்பிராயம், குடும்ப ஒற்றுமை, முதியோா பங்கு என்பவற்றை முற்றாக தகர்த்தெறிந்துள்ளது. முறை சாா்ந்த சட்டமும் ஒழுங்கும் சீர்கெட்டுள்ளது. இத்தகைய ஒரு நிலை இங்கு சமூக கலாசார சீரழிவுக்கும், கொலை, களவு, கப்பம் கோரல என்பவற்றைத் தூண்டியுள்ளது. இதனால புதிய தொழில வாய்ப்புக்கள் உருவாகமுடியாத நிலை தொடருகிறது.

திடீர்மரணங்கள், சொத்துடமை, இழப்புக்கள் என்பனவும் தொழிலின்மைக்கு வழிவகுத் துள்ளன. பௌதிக உட்கட்டமைப்புக்களும் அடிப்படைச் சேவைகளும் இங்கு சீர்கெட்டுள்ள நிலை தொழில் வாய்ப்புக்களை பாதித்துள்ளன. உயர் வில்லைகளும், சீரற்ற விநியோகமும் குடாநாட்டு மக்களை மிகமோசமாகப் பாதித்துள்ளது. விலைக்கட்டுப்பாடுகள் என்ற வகையில் ஆங்காங்கே சிறிய சில்லறை வியாபாரிகள் சிலர் தண்டிக்கப்பட்டபோதும் விலை உயர்வுக்கு காரண மான கப்பலில் பொருள் ஏற்றிவருவோர் மொத்தவியாபாரிகள் பலரும் இதில் கண்டும் காணாமலும் விடப்படுகின்றனர். கப்பலல் வரும்' பொருட்கள் இறக்குமிடங்களில் அபகரிக் கப்படுவதாலும், கப்பல் தாமதங்கள் என்பன விலை உயர்வுக்கு காரணங்கள் என கப்பலில் பொருள் கொண்டுவருவோர் குறிப்பிடுகின்றனர்.

இத்தகைய விலை உயர்வுகள் பல தொழில் வாய்ப்புக்ளை இல்லாமல் செய்துள்ளன. இதுவரை இடம் பெயர்ந் தோர் நலம் பேணல், புனருத்தாரணம், புனர்வாழ்வு, மீள்குடி யேற்றம் தொடர்பில் ஈடுபடும் ஒரு சில அரச, அரச சார்பற்ற நிறு வனங்களில் (NGOS) ஒருசில புதிய அவலம் சார் தொழில் வாய்ப்புக்கள் உருவாகிவந்தன. அதுவும் பல அரச சார்பற்ற நிறுவனங்கள் குடாநாட்டைவிட்டு வெளியேறியதால் தொழில் இழந்துள்ளனர்.

இன்று யாழ்.குடாவில் வெளிப்படையாக வேலையின் றியிருப்போா் ஒருபுறமும், மறை முகமாக (கீழ்உழைப்பு நிலையில்) வேலையின்றி பலரும் உள்ளனர். அதாவது குறைந்த நேர வேலை தகைமைக்கு குறைந்த வேலை, மிகை ஊழியமாக வேலை என்ற நிலையில் மறைமுகமாக வேலையின் மையில பலர் உள்ளனர். நீண்டகால ரீதியில் அமைப்பு ரீதியி லான வேலையின்மையில் (Structural unemployment) பலர் உள்ளனர்.

**வே. கருணாகரன்** *பொருளியல் ஆசிரியர்*

வேலையின்மையும், வறுமையும் ஒட்டிப்பிறந்த இரட்டைக குழந்தைகளாகும். இரண்டும் ஒன்றில் மற்றது சார்ந்துள்ளது. இவ்வகையில் யாழ்.குடாநாட்டில் வேலையின்மை வறுமைக்குள் பலரையும் தள்ளியுள்ளது. இடம்பெயர்ந்து அகதிகளாக உள்ளவர்கள் சொந்த இடங்களில் அவசியமான அடிப்படை வசதிகளுடன் மீளக்குடியமர்ததப்பட்டு முழு யாழ். மக்களினதும வாழ்க்கைத் தரம் உயர்த்தப்படவேண்டும். இதற்கு புரையோடிப போயிருக் கும் இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணப் பட்டு சமாதானமும் சாந்தியும் நிறைந்த தெய்வீக யுகம் மலர இறையருள்ள வேண்டுவோமாக.



## கலிபர் ஐம்பதான காலம்

"வெளிக்கிட்டு
முப்பத்து மூன்றாம் நாள் வந்து சேர்ந்தேன்
காலம் எல்லாம் நடந்தவன் போல
குடிவரவு அதிகாரி
கடும் வெய்யில் கண்டவர்போல்
சிவத்திருந்தார்
தலித்தாய் பிறந்து
தமிழனாய் குனிந்து
கறுப்பனாய் என்னை உணர்ந்தேன்
ஏன் வந்தாய்? என்றார்.
அக்கிரமம் தலைதூக்கி
அன்பு தணிந்து போன காலத்தில்
பிறந்தவன் ஐயா என்றேன்
கல்லாகிப் பொல்லாகி இரும்பாகிக்
கலிபர் ஐம்பதான காலத்தில் வாழ்ந்தவன்
திரும்பவும் முறைத்து
நீ ஏன் வந்தாய்? என்றார்.
அண்ணனும் தம்பியும் அடித்து
அடுத்த வீட்டானும் அதற்கு அடுத்தவீட்டானும்
துரத்த
ஆர் ஆரோ பட்ட துயரெல்லாம் என் கதையாகி
அவர் கலங்கி,
என்ன கொண்டு வந்தாய்? என்றபோது
மூவாயிரம் ஆண்டு இழுத்து வந்த சிலுவை
இருக்குது
முப்பதாண்டுகளாய்ச் செய்த ஆணிகள்
இருக்குதென்றேன்
போய் நீ உன்னையே அறை என்று
கைகுலுக்கிக் கனடாவுக்குள் அனுப்பி
வைத்தார்
இங்கே
இலைகொண்ட கொடி ஆட
என்னை அறைவேன் சிலுவையிலே"

"வியாகுலப் பிரசங்கத்தில்" செல்வம் அருளானந்தம்



# தரிசனம்

ராவய

# யுத்தமும் வேலைவாய்ப்பும்

கூட்டுத்தாபனங்களில் வேலைவாய்ப்புகளைப் பெற்றுக் கொடுப்பது பாராளுமன்ற உறுப்பினர்களின் வேலையாகி விட்டது. அங்கு வெற்றிடங்கள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் பிரச்சினையில்லை. ஒவ்வொரு தேர்தல்களின் முடிவிலும் லேக் ஹவுஸ் நிறுவனத்தில் ஊழியர்கள் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

அமருவதற்கு கதிரைகள் இல்லாத, செய்வதற்கு எந்த கடமைகளும் இல்லாத அந்த நியமனங்களின் பெரும்பான்மையின் இலக்கு அரசியல் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வது மட்டுமே. மாதம் முழுவதும் உணவகத் திலிருந்து



விட்டு ஊதியத்தைப் பெற்றுக் கொள்வதே அவர்களுக்குரிய பணியாகும்.

அது மட்டுமன்றி பெற்றோலியக் கூட்டுத்தாபனம், துறைமுகம், காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஆகிய சகல நிறுவனங்களும் அமைச்சர்கள் மற்றும் மந்திரிகளின ஜொப் ஏஜன்சி களாகி ஆகி விட் டன. ஊழியர் அதி கரிப்புடன் பணி கள் முற்றுப் பெறா மை இங்கு நிக ழும் துரதிஷ்ட வச மான நடவடிக்கையாகும், பெற்றோலியக் கூட்டுத்தாபனம், துறைமுகம், காப்புறுதி, மின்சார சபை ஆகிய அனைத்து நிறு வனங்களும் நாளுக்கு நாள் மோசமான நிலையை அடைந்து செயலற்ற நிலைக்குள்ளாக்கியுள்ளன.

இலாபங்களை ஈட்டிக் கொள்வதற்காகவே நிறுவனங்கள் நடாத்தப்படுகின்றன. ஆனால் இலங்கையில் அரச நிறுவ

## தெற்கின் கருத்து

னங்கள் நடத்தப்படும் முறையானது அவற்றை விரைவில் இல்லாமலாக்கி விடும் நடைமுறையாகும்.

எமது இ.போ.ச மற்றும் புகையிரத சேவைகளை எடுத்து நோக்கினால் அங்கு ஊழலும் விரயமும் மட்டுமே உள்ளன. வேறு நாடுகளில் இவை இலாபம் ஈட்டக் கூடிய நிறுவனங்களாக உள்ளன. போக்குவரத்து சபையினால் நிர்வகிக்கப் படும் பஸ் ஒன்றில் மட்டும் 16 சாரதிகளும் நடத்துநர்களும் பணியாற்றுகின்றனர் என்று ஒரு தடைவை தகவல் ஒன்று வெளியாகியிருந்தது.

கனடாவின் மொன்றியல் தொடக்கம் அமெரிக்க நியூயோர்க் நோக்கி செல்லும் ப்ஸ் ஒன்றில் பயணிக்க ஒரு முறை

**சாம் விஜேசிங்க**
*பாராளுமன்ற முன்னாள் செயலாளர் நாயகம்*

எனக்கு வாய்ப்பு கிடைத்தது. காலை 6.00 மணிக்கு சேவையை ஆரமபிக்கும் பஸ் அடுத்த நாள் காலை 7.00 மணிக்கு இலக்கை அடைகின்றது. இந்த 13 மணி நேர பயணத்தின் பின்பு இடையில் பஸ்ஸில் வேறு எஞ்சின் பொருத்தப்படுவதுடன் பஸ்ஸில் நடத்துநர் சேவை இல்லை.

சாரதியும் பயணிகளும் மட் டுமே உள்ளனர். எமது நாட்டில் பொதுத் துறையின் வெற்றிடங்களை நிரப்பும் நடைமுறை கேலிக்குரியதாக இருப்பதற்கு இந்த உதாரணமே போதுமானதாகும். இங்கு நாம் தமிழ் இளைஞர் சமுதாயம் குறித்து அவ தானம் செலுத்துவதும் அவசியமாகும்.

தற்போது தமிழ் இளைஞர்கள் அரசாங்க வேலைகளுக்கு விண்ணப்பங்கள் அனுப்புவதில்லை. தற்கால சிங்கள தமிழ் சந்ததியினர் ஒருவர் மீது ஒருவர் எதிரி மனப்பான்மையைக் கொண்டுள்ளனர் என்றே தெரிகின்றது.

தமிழ் மக்கள் மத்தி யில் இந்த எதிர்ப்புணர்வு அதிகரிப்பதற்கான காரணங்கள் பல உண்டு. அவர்கள் மத்தியில் அரச துறைகளை நிராகரிக்கும் கொள்கைப் போக்கே உள்ளது. ஆனால் இனப்பிரச்சினை யுத்தமாக உருமாறுவதற்கு முன்னர் அரச துறையில் முக்கிய வகிபங்குகளை தமிழர்களே ஏற்றிருந்தனர். அவர்களின் மொழி ஞானம், புத்திசாதுரியம் மற்றும் திறமை என்பன அதற்கு உதவின. அவர்களின் கல்வி ஞானம் அதற்கான வாய்ப்புகளை வழங்கியிருந்தது.

வசதி வாய்ப்புகள் நிறைந்த சிங்கள குடும்பத்தின் பிள்ளைகள் உயர் கல்வியைப் பெறும் போது குறைவான வசதி வாய்ப்புகளைக் கொண்ட தமிழ் மக்களின் பிள்ளைகள் அந்த நிலைமைகளிலிருந்து மீளுவதற்கான வழியாக கல்வியைப் பயன்படுத்திக் கொண்டனர். 56ன் பின்னர் வசதி வாய்ப் புகள் அற்ற குடும்பத்தைச் சேர்ந்த சிங்கள பிள்ளைகளே ஆர்வத் துடன் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

யுத்த நிலைமைகள் காரணமாக தமிழ் மக்களின் கல்வி நிலைகள் பாதிக்கப் பட்டுள்ளன என்பது உண்மையே. முடிந்த வரை அவர்கள் கல்விப் பாதையிலிருந்து விலகிச் செல்லாதிருக்கவே முயல்கின்றனர். அவர்கள் அரசாங்க வேலைகளில் ஈடுபாடு காட்டாது தனியார் துறை பணிகளில் அக்கறைக் காட்டுகின்றனர். அரசாங்க துறை வேலைகள் குறித்து அன்று வடக்கு கிழக்கு இளைஞர்களே பெரும் கனவுகளைக் கொண்டிருந்தனர். இன்று அவ்வாறில்லை.

இனப்பிரச்சினையும் இந்த மனமாற்றத்திற்கு காரணமாக அமைந்ததுடன் தனியார் துறை அவர்களின் தெரிவாக உள்ளது. எந்த துறையிலும் பணியாற்றக் கூடிய திறமைசாலிகள் அவர்கள். நேர்மைத் தன்மை கொண்டவர்கள். அவர்களின் தீர்மா னம் இலகுவில் தவறாக இராது.

## அன்பு வாசகர்களே!

"தரிசனம்" பற்றிய தங்களின் கருத்துக்கள், விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன.

**அனுப்பவேண்டிய முகவரி :-**

"தரிசனம்" - வலம்புரி
இல : 3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.



## சிப்பாயின் அன்னை

வானில் தாரகைகள் பூக்கும் மாலை வேளை
அலுவலகம் தொழிற்சாலைகளிலிருந்து
வீடு திரும்பும் பிள்ளைகளுக்காக
வாசற் கதவில் காத்திருக்கும் அன்னையர்

யுத்த பூமியிலிருந்து நீ அனுப்பிய தொகையில்
குடிசை வீடு மறைந்து போனது
புது வீட்டிலிருந்து வாசலுக்கு
என் கால்கள் நடை பயில்கின்றன

அன்புடன் நீ எழுதி அனுப்பியது போல்
வீட்டினுள் புதிய திரைச் சீலைகள்
புத்தாடை உடலை வருடும் போது
உனது பால் மணம் என்னை வருடும்

குண்டுகளினால் துப்பாக்கிகளினால்
தோல்வியடைந்தது எமது பட்டினி
முன்னொரு நாள் [illegible]க்கு ஊட்டிய சோறு
என் நினைவை நே[illegible]கி திரும்புகின்றது

இருளில் ஆறு பா[illegible] பொழுதில்
அன்னையர் பிள்ளைகளை கூட்டிச் செல்ல
எங்கே உன் [illegible]கம் மட்டும் தெரியவில்லை
சூரியன் அ[illegible] மறையும் இவ்வேளையிலும்

மீண்டும் வீ[illegible] வருகையில்
மூலை[illegible]ந்து கம்பீரத்துடன் விறைப்பாக
யாரு[illegible] வணக்கம் செலுத்துகிறாய்
துப்பா[illegible] ஒலிக்கின்றது எனக்குள் மட்டும்!

மொனிக்கா ருவண்பத்திரனவின்
'விசி வசரக்க சேஷ பத்ரய' என்ற நூலிலிருந்து

## இனப்பிரச்சினைத் தீர்வில்...

3ஆம் பக்கத் தொடர்ச்சி...

பயணங்கள் எமக்கு தேவையில்லை. முன்வரும் எந்த வொரு மத்தியஸ்த தரப்பும் பேச்சுவார்த்தைகளை உள் நாட்டில் நடத்தும் திறனைக் கொண்டிருக்க வேண்டும். நான் முதலிலேயே தெரிவித்திருந்தேன் பலம் வாய்ந்த மத் தியஸ்தம் அவசியம் என்று. அதற்கு மிகவும் பொருத்தமான நாடு இந்தியா என்றே நான் கருதுகின்றேன். இந்த பிரச்சினை குறித்து இந்தியாவுக்கு சிறந்த அனுபவ நிலை உள்ளது மட்டுமன்றி அவர்கள் பலமுறை இவ்விடயம் தொடர்பில் தலையீடுகளை மேற் கொண்டுள்ளனர். அதே போன்று டிக்ஷித் போன்றவர்கள் சிறந்த முறையில் பணியாற்றி யிருக்கின்றனர்.

அன்று நிலைமை இன்றை விட முற்றிலும் மாறுபட்டிருந்தாலும் அன்று அந்த பணிகள் வெற்றிகரமாகவே அமைந்திருந்தன. நாம் மீண்டும் மூன்றாவது தரப்பொன்றை நாடுகின்றோமாயின் அதற்கு சிறந்த நாடு இந்தியா. சிறந்த நபர் அப்துல் கலாம். அவர் மிகவும் வெற்றிகரமாகவும் நடை முறை சாத்தியமானதுமான அரசியலை மேற் கொண்டவர். அவ்வாறான திறந்த மனதுடன் பிரச்சினையை அணுகினால் இந்த பிரச்சினையை தீர்த்துக் கொள்ள முடியும்.

எவ்வாறா யினும் எம்மால் தனித்து இப்பிரச்சினையை தீர்க்க முடியாது. அதற்கு இந்நாட்டில் உள்ள மத்தியஸ் தவாதிகள் பொருத்தமானவர்கள் அல்லர். இந்த பிரச்சினையை நாம் திறந்த மனதுடன் அணுக வேண்டும்.

## ஆசிரியர் குறிப்பு:-

அரசாங்கத்திற்கும் புலிகளுக்கும் இடையில் தொடர்ச்சியான யுத்தம் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றது. தாம் இருக்கும் இடத்திலிருந்து பின்வாங்க எந்தத் தரப்பும் தயாரில்லை என்றே தோன்றுகின்றது.

மிகவும் மோசமான யுத்தத்தில் சிக்குப்பட்டிருக்கும் இந்த இரு தரப்பினரதும் தீவிர யுத்த பயணத்தில் சற்று இளைப்பாறுவதற்கு மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தம் அவசியமாகும்.

இந்த நிலைமையின் கீழேயே விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் தனது அவதானத்தை செலுத்த முடியும்.

இந்தியா, நோர்வே மற்றும் இணைத் தலைமை நாடுகள் வேறுபட்ட நோக்கங்களுடன் இலங்கையின் தேசியப் பிரச்சினை தொடர்பில் மேற்கொள்ளும் தலையீடுகள் குறித்து நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டியது அவசியம்.

வெளிநாட்டு தலையீடுகளை ஒரேயடியாக நிராகரிப்பதோ அல்லது அவ்வாறு அதனை ஏற்றுக் கொள்வதனையோ மேற்கொள்ளாது அதன் தேவைப்பாடு எவ்வாறானது என்பது குறித்து அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் அவதானம் செலுத்துவது இச்சந்தர்ப்பத்தில் அவசியமான செயற்பாடாகும்.

எத்தனையோ அநீதிகள் - பழக்கத்தால் நீதிகளாகத் தோன்றுகின்றன.

-ஆப்கானிஸ்தான்

வலம்புரி

# காணாமல் போனவர்களின் உறவுகள் கூ(ட்)டிய மாநாடு

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக நடந்த மாநாடுகள் போல் இப்போது காணாமல் போனவர்களின் உறவினர்கள் கூடி மாநாடு நடத்தியுள்ளனர்.

தமது உறவுகளை மீட்டுத் தரும்படி அவர்கள் உருக்கமான வேண்டுகோளை விடுத்துள்ளனர். காணாமல் போனவர்கள் தொடர்பில் இதுவரை நூற்று முப்பத்தொரு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக மக்கள் கண்காணிப்புக் குழுவின் அமைப்பாளர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

காணாமல் போனவர்களின் உறவினர்கள் ஒன்று கூடியபோது தமது உறவுகளுக்காக கண்ணீர் விட்டவர்கள், கதறி அழுதவர்களின் நிலை மிகவும் பரிதாபத்துக்குரியது.

நாட்டை ஆள்பவர்கள் மனித உயிருக்கும் வாழ்வுக்குமான பாதுகாப்பை உத்தரவாதப்படுத்த வேண்டும். கடத்துவது அல்லது தண்டனை வழங்குவது என்பது மீள் மனு இல்லாத தீர்ப்பாகும்.

எனவே இத்தகைய தீர்ப்புக்களினால் பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் பெரும் பாதிப்படைகின்றனர்.

மனித வாழ்வு நிம்மதியாக அமைய வேண்டும். இழப்புகளும், துன்பங்களும், கண்ணீரும் கம்பலையுமே வாழ்க்கை என்றால் அது தேவையற்றதாகும்.

உலகில் பெரும்பாலான நாடுகளில் மக்கள் அமைதியாகவும், நிம்மதியாகவும் வாழ்கின்றனர். அவர்கள் உலகின் மெய்ப்பொருள் சார்ந்த விடயங்களிலும், சமூக, விஞ்ஞான ஆய்வுகளிலும் தங்களை ஈடுபடுத்தியுள்ளனர்.

ஆனால் இலங்கை வாழ் மக்கள் ஒவ்வொரு நாளையும் கழிப்பதில் பல்வேறு சிக்கல்கள் - சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

எந்நேரமும் எதுவும் நடக்கலாம் என்ற பயங்கரத்தில் வாழ்க்கையுள்ளது. எனவே இந்தப் பயங்கர நிலை நீடிக்கின்ற ஒவ்வொரு கணமும் மனித உயிர்களின் பறிப்பு அதிகரித்துக் கொண்டே செல்லும். ஆகவே, இலங்கை மண்ணில் இத்தகைய கொடூரம் நடப்பதை நிறுத்துவதற்கு அனைவரும் முன்வர வேண்டும்.

அமைதி, சமாதானம் என்ற இலக்கை நோக்கி நாம் அனைவரும் பயணிப்போம். இலங்கை மக்கள் கடவுள் நம்பிக்கையுடையவர்கள். பிறஉயிர்களை நேசிக்கும் பக்குவம் உடையவர்கள். எனினும் அத்தன்மை இப்போது இழக்கப்பட்டுவிட்டது.

ஆக, இழந்ததை மீட்டு இழப்புக்களை தவிர்ப்போம். கண்ணீர் விடும் வேதனையை தடுப்போம். இது இறைவனின் பெயரால் விடப்படும் கோரிக்கையாகும்.

# காலதாமதமில்லாத சேவைகளே மக்களுக்குத் தேவைப்படுகின்றன

## பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை உரை

(யாழ்ப்பாணம்)

தரமான காலதாமதமில்லாத நிர்வாக சேவைகளே மக்களுக்குத் தேவைப்படுகின்றன என வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார். தீவுகள் தெற்குப் பிரதேச செயலகத்தில் மாதிரிப் பிரதேச செயலக உருவாக்கம் நிகழ்ச்சித் திட்ட நிகழ்வு கடந்த முதலாம் திகதி பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலாளர் திரு நந்தகோபாலன் தலைமையில் இடம்பெற்றது.

இவ்விழாவிற்குப் பிரதம விருந்தினராக வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை பங்குபற்றியிருந்தார். இவர் தனது உரையில், இலங்கையின் நிர்வாகக்கட்டமைப்பு வளர்ச்சியை வரலாற்று ரீதியாக எடுத்துரைத்தார். 1938ற்கு முன்னர் மாகாணம், மாவட்டம், மணியகாரர், உடையார், விதானை பிரிவுகள் என ஐந்து நிர்வாகக் கட்டமைப்புக்கள் இருந்தன.

1938இல் மணியகாரர் பிரிவும் உடையார் பிரிவும் நீக்கப்பட்டு மணியகாரர் பிரிவுக்குப் பதிலாக காரியாதிகாரி பிரிவு உருவாக்கப்பட்டது. பின்னர் 1955 இல் மாகாண நிர்வாக முறை ஒழிக்கப்பட்டு, மாவட்டமே முதல் நிர்வாகப் பிரிவாகத் தரம் உயர்த்தப்பட்டது. 1955 இல் மாவட்டம், காரியாதிகாரி பிரிவு, விதானை பிரிவு என மூன்று அடுக்கு நிர்வாக அமைப்பு உருவாக்கப்பட்டது.

பின்னர் 1962 இல் விதானை முறை ஒழிக்கப்பட்டு, அதற்குப் பதிலாக கிராம சேவகர் முறை உருவாக்கப்பட்டது. 1972 இல் காரியாதிகாரி பிரிவுகள் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளாக மாற்றப்பட்டு அதற்கு அதிகாரங்கள் கூடுதலாக வழங்கப்பட்டன. மேலும் இப் பிரிவுகள் பாராளுமன்றத் தொகுதி எல்லைகளுக்கு இசைவாகப் புதிய பிரிவுகள் உருவாக்கப்பட்டன.

1987 இல் அரசியல் யாப்பில் மேற்கொள்ளப்பட்ட 13-வது திருத் தத்தினாலும் மாகாண சபைச் சட்டத்தாலும் மாகாண நிர்வாகம் மீளவும் கொண்டு வரப்பட்டது. 1992 இல் பிரதேச செயலகங்கள் உருவாக்கப்பட்டு, இதுவரை மாவட்ட அரசாங்க அதிபரினால் கையாளப்பட்ட பல அதிகாரங்கள் பிரதேச செயலகங்களுக்கு அளிக்கப்பட்டன.

மாவட்ட அரசாங்க அதிபர் பிரதேச செயலக இணைப்பாளராகவும் மாவட்ட செயலாளராகவும் பணி புரியலானார். இத்தகைய பின்னணியில் பிரதேச செயலகங்கள் இன்று நாட்டின் நிர்வாகத்தில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. மக்கள் பல கருமங்களைப் பிர்தேச செயலக மட்டத்திலேயே செய்யக் கூடிய நிலை உருவாகியுள்ளன.

அரசின் செயற்பாடுகள் நாளுக்கு நாள் விரிவடைந்து வருகின்றன-சட்டம், ஒழுங்கு, பொருளாதார அபிவிருத்தி, கல்வி, சுகாதாரம், சமூக சேவைகள், போக்குவரத்து வசதிகள், சுற்றுச் சூழல், பண்பாடு, கலாசாரம் என்று விரிவடைந்து வருகின்றன.

இதனால் மக்கள் பிரதேச செயலகங்களுடன் அடிக்கடி தொடர்பு கொள்ள வேண்டியவர்களாகவும் அவற்றின் சேவைகளைப் பெற வேண்டியவர்களாகவும் உள்ளனர். இதனால் தரமான காலதாமதமில்லாத நிர்வாக சேவைகள் மக்களுக்கு தேவைப்படுகின்றன. மேலும் அபிவிருத்தி நிர்வாக முறையில் பிரதேச அபிவிருத்தியில் மக்களின் பங்களிப்பு முக்கியமானது. இன்று நுண்திட்டங்களை மக்கள் பங்களிப்புடன் முன்னெடுக்கும் முறையே வலுப்பெற்றும் வெற்றி பெற்றும் வருகின்றன. இந்நிலையில் போதியளவு ஆளணியும் கணனி வசதியும் பெற்றுள்ள நிலையில் தீவுகள் தெற்குப் பிரதேச செயலகம் ஒரு மாதிரி செயலகமாகத் திகழ வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். (ச)

# பால்மாக்களுக்கான வரியினை அதிகரித்தால்தான் தாய்ப்பாலூட்டுவதில் தாய்மார் அக்கறை காட்டுவர்

## சுகாதார அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா கூறுகின்றார்

உலக மக்களின் போசாக்கு மட்டம் குறைவடைந்துள்ளதாகப் பல்வேறு அறிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதில் இலங்கையும் உள்ளடங்குகின்றது. குழந்தைகளுக்கு முறையாகத் தாய்ப் பால் ஊட்டாமையே போசாக்கின்மைக்கான அடிப்படைக் காரணமாகும் என்று சுகாதார அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

தாய்ப் பாலூட்டலின் முக்கியத்துவம் குறித்தும் அதற்கான அறிவுறுத்தல்கள் தொடர்பாகவும் நாம் மக்களுக்கு விளக்க வேண்டும். உலக தாய்ப்பால் வலுவூட்டல் வாரத்தினை மட்டும் அனுஷ்டித்தால் போதாது. அறிவூட்டல்களையும் நாம் வழங்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

உலக தாய்ப்பால் தொடர்பான வலுவூட்டல் வாரம் 31 ஆம் திகதி முதல் எதிர்வரும் 8 ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படுகின்றது. இதனை முன்னிட்டுக் கொழும்பு சுகாதாரப்பணியகத்தில் நேற்று முன்தினம்காலை இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்தபோது அவர் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டினார். அவர் மேலும் கூறியதாவது,

இன்றைய கால கட்டத்தில் பெருகி வரும் பல்வேறுபட்ட பால்மாக்களின் வருகையால் அவற்றைத் தம் குழந்தைகளுக்குக் கொடுப்பதன் மூலம் தனது குழந்தை நல்ல ஆரோக்யத்துடனும் போசாக்குடனும் வளரும் என்ற எண்ணம் எல்லோர் மனதிலும் நன்றாகப் பதிந்து விட்டது.

குழந்தை பிறந்தது முதல் ஆறு மாத காலம் வரையில் கட்டாயம் அதற்குத் தாய்ப் பால்மட்டுமே கொடுக்க வேண்டும் என்பதை எவரும் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. இதற்கு முதலில் ஊடகங்களில் வெளிப்படுத்தப்படும் பால்மாக்கள் தொடர்பான விளம்பரங்களைத் தடை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் இறக்குமதி செய்யப்படும் பால்மாக்களுக்காக அறவிடப்படும் வரிகளை அதிகரிக்க வேண்டும். அப்போதுதான் தாய்மார்கள் தமது குழந்தைகளுக்குத் தாய்ப் பாலூட்டுவது தொடர்பாக அக்கறை செலுத்துவார்கள்.

மதுபானம், சிகரெட் பாவனையினால் நாட்டில் பல்வேறு அசம்பாவிதங்கள் தோன்றின. அதனால் அவற்றைக் கட்டுப்படுத்துவதில் பல்வேறு நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டது. அதன் பயனாக நாட்டில் தற்போது மதுபானம், சிகரெட் போன்றவற்றால் ஏற்படும் பிரச்சினைகள் குறைந்துள்ளன.

இதுபோலவே பால்மாவிற்கும் சில க[illegible]பாடுகளை விதிக்க நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் [illegible]சாங்கத்தின் கமநெகும வேலைத் திட்டத்திலும் இந்த தாய்ப்பாலூட்டுதல் தொடர்பான சில வேலைத் திட்டங்களை முன்வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி தற்போது அரச நிறுவனங்களில் வேலை செய்யும் ஊழியர்களுக்கான பிரசவ கால விடுமுறைகளு[illegible] அதிகரிக்கப்பட்டுள்ளன. இவ் விடுமுறைக் காலம் குழந்[illegible] கான பாலூட்டலையும் கருத்திற்கொண்டே வழங்கப்படுகின்ற[illegible]

இவ்வாறான சலுகைகள் அரசாங்கம் மக்களுக்கு ஏற்படு[illegible] திக் கொடுப்பதை மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டு[illegible] என்றார். [illegible]

# வெள்ளி நற்சிந்தனை 28[illegible]

## நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுத[illegible]

வறுமை மனித வாழ்க்கையைச் சீர்குலைக்கும் ஒரு கொடிய நோயாகும். வயிற்றுப் பசிக்காகப் பிறரிடம் இரந்து நிற்கின்ற நிலை மிகவும் பரிதாபத்துக்குரியது. எனவே வறுமையினால் பாதிக்கப்பட்டவனை அவனுடைய நொய்மையான தன்மையினை நாம் நன்கு உணர வேண்டும். அதற்கு என்ன வழியெனப் பழைய பாடல் ஒன்று விளக்கம் தருகின்றது.

நமது வாழ்க்கையில் கேள்விப்படும் செய்திகள் பல. பிறர் தமது பட்டறிவு மூலம் சொல்பவற்றை நாம் கேட்டு மனதில் பதிய வைக்கின்றோம். உணவு தயாரிக்கும் நிலையில் நீரைக் காட்டிலும் நுண்மையானது நெய் எனப் பலர் அறிந்துள்ளனர். நெய்யையும் நீரையும் தனித்தனியே இலையிற் கட்டி வைத்தால் அந் நீர் இருக்க நெய் உருகிப் புறத்தே ஓடும். இதனால் நீரைக் காட்டிலும் நெய் நுண்மையானது என்பது விளக்கமாயிற்று.

எனினும் நெய்யை விடப் புகை நுட்பமானது எனக் கூறப்படுகின்றது. ஒரு குடம் நெய்யை வீட்டின் மேலே சொரிந்தாலும் உள் விழாமல் புறமாகப்படும். ஆனால் வீட்டினுள்ளே எரித்த நெருப்பின் புகை கூரையால் மேலே வெளிப்படும். இதனால் நெய்யைக் காட்டிலும் புகை நுட்பமானதென உணர முடிகின்றது.

ஆனால் இவற்றைவிட வறுமையால் பிறரிடம்சென்று இரப்பவன் புகையும் செல்வதற்கு அரிய இடத்திற்கும் நுழைந்து செல்வான். வறுமையால் சென்று பிறரிடம் யாசிப்பவன் மிகவும் நொய்யன். அவன் நிலைகண்டு அவனுக்கு உதவி செய்ய வேண்டும். 'வறுமை கொடிது; அதனிலும் கொடிது இளமையில் வறுமை' என ஒளவையார் கூறியுள்ளார். எளியர் இவர் என்று பிறரால் இகழப்படாமல் வாழ்வது இனிது.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

அந்த வாழ்க்கையை யார் அமைத்துக் கொடுக்கலாம்?

பணத்தைத் தேடி வைத்திருப்போர் இவ் வறுமையின் துன்ப நிலையை உணர வேண்டும். வறுமையைப் போக்கி அவர்களுக்கு வாழ்வளிக்க வேண்டும். நொய்ய மனத்துடன் வாழும் அவர்களைத் திடமுள்ளவராக்க வேண்டும். 'பிறரிடம் இரந்து வாழ்வதைவிட இறப்பதே மேல்' என அவர்கள் வாழ்வை முடித்துக் கொள்ளவும் முயல்வர். அவர்கள் அந் நிலைக்குச் செல்லாமல் பணம் படைத்தோர் அவர்களை வாழ்விற்க வேண்டும். அப்போதுதான் வறுமை எனும் கொடி நோய் தீரும். எல்லோரும் நலமுடன் வாழ சமூகம் நலம் பெறும். நாடு வளம்பெற நாலடியார் கூறிய செய்தி இதுவே.

'நீரினும் நுண்ணிது நெய்யென்பர், நெய்யினும்
ஆரும் அறிவர் புகைநுட்பம் - தேரின்
இரப்பிடும்பை யாளன் புகுமே புகையும்
புகற்கரிய பூழை நுழைந்து'

*(நாலடியார் -282)*

# நியாயமானதும் நீதியானதுமான தீர்வை சிங்களத் தலைவர்கள் தரப்போவதில்லை

## புலித்தேவன் செவ்வி



(கிளிநொச்சி)

தமிழர் தாயகத்தில் சிங்களத்தால் நிகழ்த்தப்படும் அவலங்களை அந்தந்த நாடுகளில் இராஜதந்திர ரீதியாக முன்னெடுத்துச் செல்லுமாறு புலம்பெயர் தமிழ் உறவுகளுக்கு தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் சீவரத்தினம் புலித்தேவன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவுஸ்திரேலிய தமிழ் ஒலிபரப்புக்கூட்டுத்தாபன வானொலியில் கடந்த செவ்வாய்க்கிழமை ஒலிபரப்பாகிய செய்தி அலைகள் நிகழ்ச்சிக்கு அவர் அளித்த நேர்காணலில் இதனைத் தெரிவித்தார். சிங்களத் தலைவர்கள் எமக்கு நீதியானதும் நியாயமானதுமான தீர்வைத் தருவார்கள் என்ற நம்பிக்கை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எப்போதுமே இல்லை.

ஏனெனில், காலம் காலமாக சிங்களத்தரப்போடு தமிழர் தரப்பு பல்வேறு பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டபோதும் ஒருபோதுமே தமிழ் மக்களுக்கு நீதியான-நியாயமான-உருப்படியான தீர்வை சிங்கள தேசம் முன்வைத்தது கிடையாது.

அது இப்போதும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகையால் எமது தரப்பு நியாயத்தை எமக்கு ஏன் தனித்தேசம் வேண்டு என்பதையும் எமது மக்கள் படுகின்ற அல்லல்களையும் சிங்கள ஆட்சியாளர்களால் கட்டவிழ்த்து விடப்படுகின்ற வன்முறைகளையும் அனைத்துலக சமூகத்துக்கு எடுத்துக்கூறவே சமாதான முன்னெடுப்புக்களையும் சமாதான செயலகத்தையும் நாங்கள் பயன்படுத்தினோம்.

தமிழீழ விடுதலைப்புலிகள் ஒரு நிழல் அரசை-நடைமுறை அரசாங்கத்தை நடத்திக் கொண்டிருக்கின்றனர். அதற்கான அங்கீகாரமானது எமக்கு பல்வேறு வடிவங்களில் பல்வேறு இடங்களிலிருந்து கிடைத்தும் வருகிறது.

தமிழ் மக்களுக்கான அரசினை அமைப்பதற்கான தொடக்க கால முன்னெடுப்புக்களாகத்தான் இதனை நாம் பார்க்கிறோம். இவை அனைத்துமே எமது இராணுவப் பலத்தின் அடிப்படையில்தான் கட்டப்பட்டுள்ளது. இராணுவ வலுச் சமநிலையின் அடிப்படையில் தான் இந்த யுத்தநிறுத்த ஒப்பந்தமும் சமாதான முன்னெடுப்புக்களும் மேற்கொள்ளப்பட்டன.

எமது இராணுவமும் எமது அரசியல் செயற்பாடுகளும் தமிழீழ தனியரசு உருவாக்குவது என்ற ஒரே இலக்கில்தான் குவிமையம் கொண்டிருக்கிறது. தமிழ் மக்கள் இத்தனை அவலங்களை வெளிப்படுத்தியும் இலங்கைக்குரிய அழுத்தங்களை அனைத்துலகம் கொடுக்காமல் இருக்கிறது ஏன் என்ற கேள்வி காலம் காலமாக தமிழ் மக்களிடத்தில் உண்டு. இது தொடர்பான அனைத்துலகின் செயற்பாட்டில் அதிருப்தி உள்ளது.

பொன் தட்டில் தமிழீழ தனியரசை ஒருவரும் தந்துவிடப்போவதில்லை.எமது சொந்தப் பலத்தில் நாம் நிற்கவேண்டும்.நாமே இரத்தம் சிந்தி போராடவேண்டும். அப்படிப் பெறுகின்ற விடுதலைதான் உண்மையான விடுதலை.அதனையே நாம் உணரக்கூடியதாக இருக்கும் என்று அடிக்கடி எமது தேசியத் தலைவர் கூறுவார்.

எமது தந்திரோபாய நிலைப்பாடுகள் சில எமது மக்களுக்கு புரியாமல் இருக்கலாம். புரியாத புதிராகவும் இருக்கும். நிச்சயமாக இது தொடர்பில் அவர்கள் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை. ஏனெனில் எம்மை இயக்குவது எமது தேசியத் தலைவர். நமது விடுதலைப் போராட்டத்தில் தேசியத் தலைவர் அவர்கள் பல தந்திரோபாயங்கலள வகுத்து அதற்குரிய வகையில் நகர்த்திக் கொண்டிருக்கிறார்.

விடுதலைப் புலிகளுக்கு ஒரு மரபு உள்ளது. சொல்லுக்கு முன்பு செயல் இருக்க வேண்டும் என்பதுதான் எமது தேசியத் தலைவர் எப்பொழுதும் வலியுறுத்துவது. அதனைத்தான் விடுதலைப்புலிகளும் விரும்புகின்றனர்.

தென்னிலங்கை அரசியல்வாதிகள் ஆளுக்கு ஒரு விதமாக மேடையிலே கத்தலாம். ஆனால் புலிகளைப் பொறுத்தவரை சொல்வதைத்தான் செய்வார்கள். செய்வதைத்தான் சொல்வார்கள்.

இலங்கை இராணுவம் பாரிய போர் நடவடிக்கைக்குத் தயாராகிக் கொண்டிருக்கும் நிலையில் நாங்களும் தமிழீழ விடுதலைப் புலிகளும் பாரிய அளவுக்கு அதனை எதிர்கொள்ளத் தயாராகிக் கொண்டிருக்கிறோம். எதிர்வரும் காலங்களில் பாரிய வெற்றிச் செய்திகளை புலம்பெயர் வாழ் தமிழர்கள் கேட்கக் கூடியதாக இருக்கும் என்றார். (ச-5)

# நுகர்வோர் பாதுகாப்புக்குழுவை அமைக்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா திட்டம்

(யாழ்ப்பாணம்)

தற்போதைய சூழ்நிலையில் யாழ்.குடாநாட்டில் உணவுப் பொருட்களின் விலை ஏற்றங்கள்,உணவுப் பொருட்களை விநியோகம் செய்யும் போது ஏற்படுகின்ற தடைகள்,முறைகேடுகள்,உணவுப் பொருட்களின் தரம்,நிறை போன்ற பல்வேறு காரணிகளை அவதானித்து அவற்றுக்கு உடனுக்குடன் தீர்வுகளைக் காணும் முகமாக சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நுகர்வோர் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்புக் குழுக்களை அமைக்க திட்டமிட்டுள்ளார்.

இவ்வாறான குழுக்களை மக்கள் மத்தியில் அமைப்பதன் மூலம் யாழ்.குடாநாட்டு மக்களுக்கு இன்று ஏற்பட்டு வருகின்ற இடையூறுகள் களையப்பட்டு இலகுவான முறையில் தங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை தரத்துடனும் உரிய நிறையுடனும் பெற்றுக் கொள்ளமுடியும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எதிர்பார்ப்பதாக சமூக சேவைகள் அமைச்சின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய நிலையில் சில சக்திகள் திட்டமிட்ட பல்வேறு நெருக்கடிகளை யாழ். குடாநாட்டு மக்கள் மீது திணித்து வருவதால் அதிலிருந்து பொதுமக்களை மீட்டெடுக்கும் பணியில் மிக முக்கியமானதொரு கட்டமாகவே நுகர்வோர் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்புக் குழுக்கள் ஏற்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ)

## ...ன்முறையை கைவிட்டால்...

...யும். அவர்கள் வன்முறையையும் ...ங்கரவாதத்தையும் கைவிட வேண்டும். ...து நாட்டு கடற்பரப்பில் ஆட்கடத்தல் கள், ...தைப்பொருட்கள் கடத்தல்கள், ஆயு தக் ...தல்கள் ஆகியவற்றை தடுப்பதற்கு ...பா, சீனா, அவுஸ்திரேலியா, யப்பான் ...ம் அமெரிக்கா ஆகிய நாடுகள் எமது ...ப் பொலிஸாருக்கு உதவ வேண்டும்.

...ில படகுகள் மூலம் தமிழீழ விடுதலைப் ...கள் தொடர்ந்தும் ஆயுதங்களை கடத்திக் கொண்டு வருகின்றனர்.இருப்பினும் அத்தகைய கடத்தல் கலங்களை அரசாங்கம் கடந்த இரண்டு ஆண்டுகளாக அழித்துக் கொண்டு வருகிறது.

வானிலும் தரையிலும் தாக்குதல் நடத்திய அவர்கள் இப்பொழுது கடற்பரப்பில் தாக்குதல்களை நடத்துகின்றனர். கப்பல்கள் மீதான பயங்கரவாதிகளின் தாக்குதல்கள் என்பது அனைத்துலக பொருளாதாரத்தை பாதிக்கும் என்றார் அவர். (ச-5)


## மரண அறிவித்தல்

## சகாதேவன் நிலக்ஷன்

(யாழ்.பல்கலைக்கழக ஊடகவியல் இரண்டாம் வருட மாணவன்)



இல.47 புகையிரத நிலைய வீதி, கொக்குவிலைச் சேர்ந்த சகாதேவன் நிலக்ஷன் (01.08.2007) புதன்கிழமை அகால மரணமாகிவிட்டார்.

இவர் சகாதேவன் செல்வராணி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும், சதூர்ஷனின் பாசமிகு சகோதரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (03.08.2007) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார்,உறவினர்கள்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 47, ஆடியபாதம் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்

தகவல்
குடும்பத்தினர்

(230)


## அனைத்துக்கட்சி...

யோசனைகளும் நிராகரிக்கப்பட்டுள்ள நிலையில் பிரதிநிதிகள் சபையின் ஏனைய அங்கத்தவர்கள் ஒருமித்து மேற்கொள்ளும் முக்கிய தீர்மானங்களை சுதந்திரக் கட்சி ஏற்க மறுத்து வருவதாகவும் இதன் காரணமாக இறுதி யோசனைகளை முன்வைப்பதில் மேலும் கால தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அனைத்து கட்சி பிரதிநிதிகள் சபையின் யோசனைகளை நிராகரிப்பதற்கு ஏற்கனவே ஜே.வி.பி தீர்மானித்துள்ள நிலையில் சிறிலங்கா சுதந்திர கட்சியும் ஜாதிக ஹெல உறுமயவும் ஜே.வி.பியுடன் இணைந்து தீர்வுயோசனைகளை நிராகரிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படக் கூடாது என்றும் ஐக்கியப்பட்ட இலங்கையில் ஒற்றையாட்சியின் கீழ் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும் என்றும் இந்த கட்சிகள் வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## மாணவன் உட...

நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில ஆயுததாரிகளால் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். சம்பவத்தில் வரணி மாசேரி தெற்கைச் சேர்ந்த மேசன் தொழிலாளியான கிட்ணன் வசீகரன் (வயது 22) என்ற இளைஞனே சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை வரணி மாசேரி தெற்கில் இடம் பெற்ற கிளைமோர்த் தாக்குதலில் மூன்று படையினர் கொல்லப்பட்டிருந்தனர்.இக் கிளைமோர்த் தாக்குதல் நடைபெற்ற இடத்திற்கு முன்பாகவே குறித்த இளைஞரின் வீடு அமைந்துள்ளது. பிரஸ்தாப இளைஞனின் குடும்பம் கிளைமோர்த் தாக்குதலையடுத்து அண்மையில் உள்ள உறவினர் வீடு ஒன்றில் தங்கியிருந்தனர்.

குறித்த வீட்டிற்குள் நேற்று இரவு 7 மணிக்கு மோட்டார் சைக்கிளில் சென்ற நான்கு ஆயுததாரிகள் பிரஸ்தாப இளைஞனை அழைத்து அவர் மீது துப்பாக்கிச் சூடு நடாத்திவிட்டு சென்றுள்ளனர் என விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட சாவகச்சேரி நீதிவான் பிரேத பரிசோதனைக்காக சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு கொடிகாமம் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ஏ-5)

## தொழிலாளர்...

இதேவேளை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் இருந்து வெளியேறக்கூடும் என்று கூறப்படுகிறது. கிழக்கின் உதயம் நிகழ்வைத் தொடர்ந்து நாடாளுமன்றில் பேசிய அக்கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் மகிந்த அரசாங்கத்தில் அதிருப்தியை வெளிப்படுத்தியிருந்தார்.

அதேபோல் அக் கட்சியின் தவிசாளரான பசிர் சேகு தாவூத் கடந்த வாரம் நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் பொம்மை அமைச்சர்களான நீண்ட காலம் ஒட்டிக்கொண்டிருக்கப்போவதில்லை என்று அறிவித்திருந்தார்.

மேலும் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் மீதான அதிருப்தியை வெளிப்படுத்தியும் பேசியிருந்தார்.இதனைச் சுட்டிக்காட்டி இலங்கை தொழிலாளர் காங்கிரஸைத் தொடர்ந்து சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் மகிந்த ராஜபக்ஷ அணியிலிருந்து வெளியேறக் கூடும் என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்திலிருந்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்,முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவை வெளியேறும் நிலையில் மகிந்த அரசாங்கத்தின் பெரும்பான்மையும் கேள்விக்குறியாகியுள்ளது. சிறிலங்கா சுதந்திரக்கட்சியிலும் பிளவு ஏற்படும் நிலையில் ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் அமைக்க வாய்ப்புள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சி அமைக்க ஜே.வி.பி.விரும்பாது என்பதால் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் கவிழ்ந்து அல்லது மகிந்தவினால் கலைக்கப்பட்டு பொதுத்தேர்தல் நடைபெறுவதற்கான சாத்தியக்கூறும் இருப்பதாக தென்னிலங்கை அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.இது தொடர்பில் நேற்று மாலை அமைச்சர்களுடன் மகிந்த ராஜபக்ஷ அவசர ஆலோசனை நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## எத்தனை...

என்றும் அமைச்சர் கூறினார். ஐக்கிய தேசியக்கட்சியும் மங்கள சமரவீர தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மக்கள் பிரிவும் அண்மையில் செய்து கொண்ட ஒப்பந்தம் ஏகாதிபத்தியத்தின் வெளிபாடாகும் என மேலும் கூறினார். (ச)

## 50 வீத...

உத்தியோகபூர்வமாக அந்நாட்டிடம் வேண்டுகோள் விடுத்துள்ளோம்.

இதற்காக வெளிவிவகார பிரதி அமைச்சர் அடங்கிய குழுவொன்றும் நேரடியாகச் சென்று அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். அங்குள்ள உயர் அதிகாரிகள் பலரைச் சந்தித்துள்ளனர். நாம் சாதகமான பதிலை எதிர்பார்க்கிறோம். ஒரு முறை லிபியாவில் ஐரோப்பிய ... நாட்டின் ஐவர் தூக்குத் தண்டனை வி...ப்பட்டபோது அவை லிபியாவின் சிவில் ச...ங்களை மதித்தே நடந்து கொண்டன.

பலம் பொருந்திய நாடுகளே ஒரு சுதந்திர நாட்டின் சட்டத்திற்கு மதித்து நடந்து கொண்டது. எமக்கு சிறந்த எடுத்துக்காட்டாகுமெனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ச-5)

## இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்...

மகிந்தவின் அரசாங்கத்தில் உள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் இளைஞர் வலுவூட்டல் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான், தோட்ட உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் முத்து சிவலிங்கம்,தபால் தொலைத் தொடர்புத்துறை பிரதி அமைச்சர் செல்லச்சாமி, கல்விப் பிரதி அமைச்சர் சச்சிதானந்தன், தேசிய ஒருமைப்பாடு மற்றும் அரசியல்யாப்பு பிரதி அமைசசர் என்.கேதீஸ்வரன் ஆகியோர் அமைச்சுப் பதவிகளிலிருந்து விலகியுள்ளனர்.

கடந்த 19 ஆம் திகதி நடைபெற்ற குடும்பிமலை ஆக்கிரமிப்புக் கொண்டாட்டத்தை இலங்கை தொழிலாளர் காங்கிரஸும் புறக்கணித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.இ.தொ.காவை மகிந்தவின் சகோதரர் பசில் ராஜபக்ஷ விமர்சித்திருந்தமையாலும் அமைச்சுப் பதவிகளில் திருப்தி இன்மையாலும் அரசாங்கத்திலிருந்து விலகும் முடிபை இ.தொ.கா.எடுத்திருப்பதாக தெரியவருகின்றது.

இது குறித்து மகிந்த அரசாங்கத்துடன் நேற்று கலந்துரையாடிய பின்னர் இ.தொ.கா. இந்த முடிபை எடுத்ததாக இ.தொ.கா. தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முடிபையடுத்து அமைச்சுக்களுக்கு சொந்தமான வாகனங்களை அரசாங்கத்திடம் ஒப்படைத்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

கடந்த மாதம் 5 ஆம் திகதி சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மக்கள் பிரிவு அமைப்பாளர் மங்களசமரவீரவும் இ.தொ.கா.சார்பில் ஆறுமுகம் தொண்டமானும் சந்தித்து தற்போதைய அரசியல் நிலைவரம் குறித்து கலந்துரையாடிய பின்னணியிலேயே இ.தொ.கா. இந்த முடிபை எடுத்திருக்கலாம் என்றும் கூறப்படுகின்றது.

அதேபோல் விரைவில் ரணில் விக்கிரமசிங்காவை ஆறுமுகம் தொண்டமான சந்தித்துப் பேசவுள்ளதாகவும் தெரிகின்றது. இருப்பினும் மகிந்த அரசாங்கம் இதனை மறுத்திருக்கின்றது. இ.தொ.காவினர் தொடர்ந்தும் அரசாங்கத்துடனேயே இருப்பர் என்று அரசாங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.08.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.